REGISTERED No. M. 6165.　　　　அணா 2

647

647
3.53.

பத்ஹுல் இஸ்லாம்

FATH-HUL-ISLAM

மாத பத்திரிகை

செப்டம்பர், 1953.

17 SEP 1953

விஷயம்.		பக்கம்.
வேண்டு கோள்	(மாஸ்டர் கமீல் பாபு)	1
நல்லுபதேசம் (அய்யம்பேட்டை எஸ். அப்துர் ரஜாக் ஸாஹிப்)		5
மாயமாய் மறைந்த மங்கை	(தொடர் கதை)	9
துய்ய தொழுகை துயர் தீர்க்கும் (விடத்தல்தீவு, எம். பி. எம். முஹம்மது காஸீம்)		22
ஸிராஜுஸ் ஸாலிகீன்		23
நான் கத்தா பிஸ்கட்	(மாதர் பகுதி)	31
விகடத் துண்டுகள்		32

... இஸ்லாம் ஆபீஸ் :
...நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி,
மதராஸ் 5.

3L
O7:2:11, N24 F1
N53
187023

பத்ஹுல் இஸ்லாம்.

சந்தா விபரம்:	இந்தியா, பாகிஸ்தான், ஸிலோனுக்கு	
	வருஷ சந்தா	ரூ. 1-8-0
	தனிப் பிரதி	அணா. 2
மற்ற வெளி நாடுகளுக்கு வருஷ சந்தா		ரூ. 2-0-0

எல்லா ஊர்களிலும் ஏஜெண்டுகள் தேவை. எல்லா விஷயங்களுக்கும் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

மானேஜர்,

பத்ஹுல் இஸ்லாம்,

20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

ஹஸ்ரத் ஷய்க் பூஅலி கலந்தர் அவர்களின் சரித்திர சுருக்கம்

இப்புஸ்தகத்தில் ஹஸரத் ஷெய்க் பூஅலி கலந்தர் ஷர்புத்தீன் பானிபத்தி (றஹ்) அவர்கள் பிறந்ததும், அவர்கள் நகர வாசத்தை வெறுத்து காடுகளிலும் மலைகளிலும் குகைகளிலும் போய் இறைவனது தியானத்தில் மூழ்கியதும், அவர்களுக்கு முர்ஷித் (குரு) ஹஸ்ரத் ஸெய்யிதினா ஆஷிக்குதா (றஹ்) அவர்களின் தரிசனம் வாயப்பெற்றதும் அவர்களின் மஹத்தான காமத்துகளும், அவர்களின் வபாத்தும், அவர்கள் பேருக்கு ஓதப்படும் "ஸெஹமனி பாத்திஹா" வின் விபரமும் அடங்கியுள்ளன. இதன் விலை அணா. 4

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்

ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸ்.

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

பத்ஹுல் இஸ்லாம்.

செப்டம்பர்—1953.

வேண்டு கோள்.

(மாஸ்டர் கமல் பாபு.)

லாஇலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர்
ரஸூலுல்லாஹ்.

(இதன் பொருள்) "திட்ட வட்டமாக யாருமில்லை, அல்லா ஒருவனைத் தவிர. முஹம்மத் ரஸூலுல்லா அவனுடைய திருதூதராகு வார்கள்."

இஸ்லாத்தின் அடிப்படையான இக்கலிமாவை அர்த்தத்தோடு அறிந்து ஓதியவர்கள் முப்பது சதவிகிதமென்றால் மிகையாகாது. மீதியுள்ள எழுபது சதவிகிதம் கலிமாவின் வாக்கியத்தையே சரிவர ஓதாமல் நரகத்தின் வழியே நோக்கிச் செல்லுகிறார்கள். ஆண்டவன் திருமறையிலே, அல்முஃமினூன இக்வதுன். அதாவது "முஸ்லிம்கள் ஒருவர்கொருவர் சகோதரர்கள்" என்று கூறியுள்ளான். இவ்வாக்கியத்தை அறிந்தும் எத்தனையோ முஸ்லிம்கள் தம் சகோதரர்களாகிய பிற முஸ்லிம்கள் நரகத்தின் வழியே செல்வதைப் பார்த்தும் அதைத் தடுக்காமல் பராமுகமாக இருக்கிறார்கள்.

முற்கால மக்களின் நலத்தை நாடி நாயன் நபிகளை அனுப்பியது போல் இக்காலத்தில் நபியை அனுப்பமாட்டான் என்பது ஒவ்வொரு முஸ்லிமும் அறிந்த விஷயமாகும். காரணம்? நம் நபி நாயகம் முஹம்மது முஸ்தபா, அஹ்மது முஜ்தபா, ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுடனே நபியின் பிறப்பை நாயன் ரத்தாக்கி விட்டு, நபிகளின் வேலையை செய்ய உத்தம நபியின் உம்மத்துக்களாகிய நமக்கே திருக்குர்ஆன் மூலமாய் ஆண்டவன் கட்டளை விடுத்துள்ளான்.

வல்தகுன் மின்கும் உம்மதுன் யத்ஊன இலல்கைரி வயஃமுறுன பில்மஃறுபி வயன் ஹவுன அனில் முன்கர்.

(இதன் பொருள்) "நல்வழியில் கூப்பிடவும், நேர்மையான வேலை செய்ய உத்திரவு செய்யவும், தீயவேலையிலிருந்து தடுக்கவும், உங்களில் நின்றும் ஒரு கூட்டம் அவசியமாக இருக்கவேண்டும்" இது அன்பே உருவான ஆண்டவனின் கட்டளை. இக்கூட்டத்தில் ஒவ்வொரு முஸ்லிமும் கலந்து கொண்டு நம் முஸ்லிம் சமுகத்தைச் சீர்திருத்த வேண்டியது அவசியத்திலும் அத்தியாவசியமாகும். இவ்வேலை செய்வதற்காகவே ஆண்டவன் இன்னொரு இடத்தில் நம்மை மேன்மை படுத்தி புகழ்ச்சியுடன் கூறுகிறான்.

குன்தும் கைர உம்மதின் உக்ரிஜத் லின்னாஸி தஃமுறுனபில்மஃறுபி வதன்ஹவுன அனில் முன்கரி.

(இதன் பொருள்) "நேர்வழியே காட்டுகிறீர்கள். தீய வழியிலிருந்து தடுக்குகிறீர்கள். ஆகவே, நீங்கள் மக்களின் நலத்தை நாடும் வெளிபடுத்தப்பட்ட மேன்மையான உம்மத்துக்கள்" இவ்விதமாக ஆண்டவன் கட்டளையோடு கருணைக்கொண்டு "மேன்மையான உம்மத்துக்கள்" என்ற பட்டத்தையும் கொடுத்து இருக்கிறான். ஆண்டவனுடைய கட்டளைக்கு மீறி அவனுடைய கோபத்திற்கு நாம் ஆளானால் நமக்கு வேறு யார் கருணை காட்டுவார்கள் என்பதை முஸ்லிம்களாகிய நாம் ஒவ்வொருவரும் ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

இன்றைய உலகில் முஸ்லிம்களின் ஜனத்தொகை ஏறக்குறைய எழுபது கோடி இருக்கிறது. இந்த எழுபது கோடி மக்களை சீர் திருத்த அவர்களின் நலத்தை நாடி ஐந்து லட்சம் முஸ்லிம்கள் இன்று "தப்லிக் ஜமாஅத்" என்னும் நேர்வழி காட்டும் கூட்டத்தில் சேர்ந்து தங்கள் ஊரை துறந்து, உற்றாரை பிரிந்து, தாயை மறந்து, தந்தையைத் துறந்து, மனைவியை மறந்து, பிள்ளைகளை பிரிந்து, செல்வ சர்வசுகங்களையும் இழந்து, காடு மேடு ஏறி நடமாட்ட மில்லாமல் நாயனை அறியாமல் நாடோடிகளைபோல வாழும் நான்கு முதல் நாற்பது வீடுகள்வரையுள்ள, 'தட்டா' 'மேல்குப்பம்' 'தொட்டநத்தா' போன்ற சிறுசிறு கிராமங்கள் முதல் கொண்டு புகழ் பெற்ற பெரிய பெரிய நகரங்களாகிய, மதறாஸ், ஹைதர்ஆபாத், பம்பாய், பூனா, கல்கத்தா, லாஹூர், கராச்சி, சிந்து, பஞ்சாப், டாக்கா, இதுகளுடன் மேல் நாடாகிய இந்தோனேஷியா, ஆப்ரிக்கா, லண்டன், அமெரிக்கா, ஆஸ்ட்ரேலியா, மக்கா, மதினா, மிஸர், ஷாம், பக்தாத், துர்கி, ஈரான், இராக், சுருக்கமாக இந்த பூலோகத்தையே சுற்றிக்கொண்டு வேலை செய்து வருகிறார்கள். இதில் பிரபல வியாபாரிகளும், புகழ்பெற்ற பணக்காரர்களும், அறிவில்

187023

சிறந்த ஆலிம்களும், மேன்மை பொருந்திய மதவாதிகளும், வாஞ்சை மிக்க வாலிபர்களும், வயோதிக கிழவர்களும், சிறுமையில் சிரிக்கும் செந்தாமரையான ஏழைகளும், வறுமையிலும் வாடாமலராக மலர்ந்த முகமுள்ள வாலிபர்களும் கலந்து வேலை செய்து வருகிறார்கள். என்கிலும், எழுபது கோடி முஸ்லிம்களுக்கு ஐந்து லட்சம் முஸ்லிம்கள் வேலை செய்வதைப் பார்த்தால், ஒரு பிடி சாதம் வைத்துக்கொண்டு ஒன்பது விருந்தாளிகளை அழைத்ததுபோல் தெரிகிறது. எனவே இத் தப்லிக் ஜமாஅத்தில், ஒவ்வொரு முஸ்லிமும் கலந்து கொள்ள வேண்டும். வாரத்திற்கு ஒரு நாளாகிலும் தீனுக்கு அற்பணம் செய்து விட வேண்டும். இதில் குறிப்பாக வாலிபர்கள் அதிகமாக பங்கெடுத்துக்கொள்ள வேண்டும். இதுவே இன்றைய முஸ்லிம் சமுதாயம் முஸ்லிம்களிடம் “ வேண்டு கோள் ” விடுத்திருக்கிறது.

தற்காலத்தில் தப்லிக் ஜமாஅத் செய்யும்வேலை, அரசாங்கத்தையோ, பிறகட்சிகளையோ தாக்குவதாக இல்லை. முஸ்லிமல்லாதவனை முஸ்லிமாக்குவதுமில்லை. மூடநம்பிக்கையிலுள்ள முஸ்லிம்களை உண்மை முஸ்லிமாக்க வேண்டியதே இக்கூட்டத்தின் கொள்கை. ஆண்டவனே திருக்குர்ஆனிலே திருவுளமாகிறான்: “ முஸ்லிம்களே நீங்கள் உண்மையான முஸ்லிம்களாக ஆகிவிடுங்கள்.” இவ்வாக்கியத்தை அடிப்படையாகக் கொண்டுதான் இன்று தப்லிக் ஜமாஅத் முஸ்லிம்களுக்கு உபதேசம் புரிந்து வருகிறது. தப்லிக் ஜமாஅத்தில் சேர்ந்து வேலை செய்பவர்களுக்கு எவ்வளவு புண்ணியமிருக்கிறதென்று வல்ல இறைவனாகிய அல்லா சுப்ஹானஹு வதஆலா ஒருவனைத் தவிர வேறு யாரும் அறியமாட்டார்கள்.

தப்லிகிற்காக ஒருவன் வீட்டை விட்டு புறப்பட்டானேயானால் அவன் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியின் கீழுள்ள மண்கள் யாவும் ஆண்டவனிடம் அவனுக்காக பாவமன்னிப்பு தேடுகிறது. தப்லிகிற்கு பிறப்பட்டபின் அவன் ஓதும் ஒவ்வொரு ‘இஸ்மு’களுக்கும் ஏழு லட்சம் ‘ஸவாப்’ என்ற நன்மைகிடைக்கிறது.

உதாரணமாக ஒருவன் ஒருமுறை ‘சுப்ஹானல்லா’ என்று ஓதினால் அவனுக்கு எழு லட்சம் சுப்ஹானல்லாவின் நன்மை கிட்டுகிறது; இதுவும் தவிர, ஒரு தொழுகாத முஸ்லிமை தொழுவாளியாக செய்துவிட்டால், தொழுது கொள்பவனுக்கு ஆண்டவன் எவ்வளவு புண்ணியம் அருள்கிறானே அவ்வளவு புண்ணியம் தொழுவாளியாக செய்தவனுக்கும் அருள் புரிகிறான். அவன் தொழுவாளியாக ஆனபின் இன்னொரு முஸ்லிமை தொழுவாளியாக செய்து விட்டால், இருவருடைய புண்ணியத்திற்கு சமமாக முன் தொழுவாளியாக செய்த முஸ்லிமுக்கும் பின் தொழுவாளியாக செய்த முஸ்லிமுக்கும் ஆண்டவன் கொடுக்கிறான். இதேபோல் ஒவ்வொருவனும் ஒவ்வொரு முஸ்

லிம்களை தொழுவாளிகளாக செய்து கொண்டே போனல் அவர்கள் தொழும் புண்ணியத்திற்கு சமமாக தொழுவாளியாய் செய்த சிதேவி களுக்கு அருள் புரிந்து கொண்டே இருக்கிறான்.

எனவே, எத்தனை நாட்கள் ஜீவித்திருந்தாலும் ஒரு நாள் மரண மாக வேண்டுமென்பதை மனதில் எண்ணி ஒவ்வொரு முஸ்லிமும் இத் தப்லிக் ஜமாஅத்தில் சேர்ந்து நாயனுக்கும் ரஸூலுக்கும் வழிபடிந்து பிறருக்கும் உபதேசம் செய்து முஸ்லிம் சமுகத்திற்கு தொண்டு செய்ய முஸ்லிம் சமுதாயம் வேண்டுகிறது. வெறும் சொற்களிலுள்ள முஸ்லிம்கள் யாவரும் செயலில் முஸ்லிம்களாக திகழ வேண்டும்.

அறிந்த ஆலிம்களையும் செல்வ சீலர்களையும் விவேக வாலிபர் களையும், சீர்அழிந்திருப்பதை மீண்டும் செழிப்புறவே இன்று முஸ்லிம் சமுதாயம் தாழ்மையோடும் வணக்கத்தோடும் வாஞ்சையோடும் வேண்டுகிறது.

மஜ்மூஅ முனஜாத்

சுத்தத் தமிழ்

(முதல் பதிப்பு)

இந்த புஸ்தகத்தில் ஹக்குபேரில் முனஜாத், யாஸையிதி மாலை, யாகுத்பா மாலை, தலை பாத்திஹா, ஸலவாத்துப் பாட்டு, முத்துமணி மாலை, பக்தி ஆனந்த பாத்தி முத்து மாலை, முஹியித்தீன் முனஜாத், காஜா பந்தேனவாஸ் முனஜாத், சரஸ்வதி மாலை, காஸிம் புலவர் இன்னிசை, கலியாண வாழ்த் துப் பதங்கள் ஆகிய இவைகள் சேர்ந்திருக்கின்றன.

விலை அணா. 8

ஷை அறபுத் தமிழ் ரூபாய். 1—4—0

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

நல்லுபதேசம்.

(அய்யம்பேட்டை S. அப்துர் ரஜாக் ஸாஹிப்)

குறித்த நேரம்

குறித்த நேரத்தில், குறித்த வேலை செய்தால் பொழுது போவது தெரியாது. அப்படிச் செய்யாமலோ, அல்லது சும்மா யிருந்தோ, நேரத்தை கழிப்பதாயின் நேரம் நீளமாகத் தான் தெரியும்.

சிறியோர்களே! நீங்கள் சிறு பிராயமுதல் குறித்த நேரத்தில் குறித்த வேலையைச் செய்ய பழகுங்கள். அப்போது உங்கள் சகல காரியங்களும் நல்ல விதமாக கைக்கூடும். உங்கள் நற்பழக்கத்தைக் கொண்டு மற்றவர்களும் உங்களை பின் பற்றி நடப்பார்கள்.

அநேகர் தூங்கித் தூங்கி நேரத்தை வீணே கழித்து சோம்பலை மேற்கொள்ளுகிறார்கள். இது மிகவும் வருந்தத்தக்கது. நேரம் என்பது விலையில்லா மாணிக்கம். அது உங்கள் கைக்கு எட்டியுங்கூட நீங்கள் அதன் அருமை தெரியாது எறிந்து விடுகிறீர்கள். இது உங்கள் அறியாமை யன்றோ!

துரு இரும்பைப் பிடிப்பது போல் சோம்பலை உங்கள் அறிவின் துரும்பென எண்ணுங்கள்.

மேனாட்டு ஸ்திரீகள் நேரத்தை கிஞ்சித்தும் வீண் கழிப்பதில்லை. அதனால் அவர்களுக்கிடை விசேஷ சுருசுருப்பும், பூரண சரீர சௌக்கியமும் தென்படுகின்றன.

நீங்களும் நேரத்திற்கு கட்டுப்பட்டு அவ்வப்போது செய்ய வேண்டிய வேலைகளைச் செய்து முடிப்பீர்களாகில், பெரியவர்களாகி நம் நாட்டிற்கும் நாட்டு மக்களுக்கும் தொண்டு புரிந்து புகழ் பெறுவீர்கள்.

ஆடம்பர வாழ்க்கை

மானிட வாழ்க்கைக்குரிய அபிவிருத்தி அம்சங்களில் சில அம்சங்கள் பகிரங்கத்தில் நன்மைக்குரியனவாக தென்பட்ட போதிலும் அந்தரங்கத்தில் அவை தீமைக் குரியவைகளாகின்றன.

இவற்றுள் ஆடம்பர வாழ்க்கையும் பிரதானமாகும். அத்தகைய வாழ்க்கையுடன் உயர்ந்த அந்தஸ்தை யடைய வேண்டும் என்ற எண்ணம் மானிட இயற்கையைச் சார்ந்ததேயாகும்.

மானிடர்களுக்கிடை அவ்வித எண்ணம் இல்லாதிருப்பின் உலக அபிவிருத்திக்கான ஊக்கம் குன்றிப்போ யிருத்தல் ஆச்சரியமன்று. கல்வி கற்கவோ அல்லது வித்தைப் பயிலவோ அவ்வளவு அவசியம் இருந்திருக்கக் காரணமில்லை.

மனிதன் அறிந்தோ அறியாமலோ மேற்கொள்ளும் அரும்பெரும் காரியங்களில் யாவும் இந்த ஊக்கம் மறைந்து கிடக்கின்றது.

ஆனல், ஆடம்பர வாழ்க்கைச் செலவு ஒருவரின் வருமானத்தை பொருந்தியதாகும். குறைந்த வருமானத்தில் அச்செலவு வீணே அதிகரித்தால் அது அவரைப் பாழ்படுத்திவிடும். செய்நேர்த்தியின் ஊக்கம் இல்லையேல், மனிதன், உயர்ந்த உடைகளை தயாரித்து சிங்கா ரத்துடன் வாழ சம்மதியான்.

ஆடம்பர எண்ணத்தினலே கலியாண காரியங்களிலும் விருந்தளிப் பதிலும் ஏராளமான வீண் செலவு செய்து அநேகர் கடனாளியாய் விடுகிறார்கள்.

சுருங்கச் சொல்லுமிடத்து ஆடம்பர வாழ்க்கையானது ஒருவரை க்ஷீணதசைக்கு கொண்டு வருவது போலவே, சாதாரண வாழ்க்கை யானது குறைந்த அந்தஸ்துள்ளவர்களின் முன்னேற்றத்திற்கு முட்டுக் கட்டையாகாது. அவர்களின் கஷ்ட நிஷ்டூரங்களை நாளடைவில் குறைத்துக் கொண்டு போகும். அவர்களின் வருமானம் அவர்களின் வாழ்க்கைச் செலவு போக மிச்சப்படும். எனவே, சாதாரண வாழ்க் கையின் பலாபலன்கள் எவ்வளவு அனுகூலமானவைகள் என்பது இதனல் நன்கு வெளியாகின்றன.

சுவர்க்க வழி.

ஹஸரத் காலித்பின் வலீத் (ரலி) விவரிக்கிறார்கள்:—

நான் ஒருதடவை நபிபெருமானவர்களிடத்தில் "நபிநாயகமே! தவறு என்பது சாதாரணமாய் எல்லோராலுமே ஏற்பட்டு விடுகிறது. ஆனல், அது ஆண்டவன்பால், பயபக்தியுடையவர்களைக் கொண்டும் ஏற்பட்டுவிடுங் கால், தம் தவறையுணர்ந்த அத்தகையோர், விசேஷ ஆறுதலற்று விடுகிறார்களே, அந்த ஆறுதலின்மையும் சஞ்சலமும் ஏற்படாவண்ணம் தாங்கள் எனக்கு யாதொரு பரிகாரம் காண்பிப்பீர் களாக" என்று கேட்டுக்கொண்டபோது,

"நீங்கள், எங்கு எந்த நிலைமையில் இருந்தபோதிலும் சரியே அல்லாவுக்கு பயப்படுங்கள். தீமையான காரியத்திற்குப்பின் யாதொரு நன்மையான காரியத்தைச் செய்யுங்கள், அது முந்தின செயலின் விளைவை மாற்றிவிடும். இன்னும் மக்களுடன் நல்லவிதமாய் பழகிக்

கொள்ளுங்கள், இதுவே நற்பலனுக்குரியவழி அதாவது சுவர்க்கப் பாதை'' என்று மொழிந்தார்கள்.

அல்லாமா சாலிஹ் ஜஸாயிரி, இந்த ஹதீதின் விளக்கத்தை குறித்து எழுதுகையில் குறிப்பிடுகிறார்கள்:—

"நபிபெருமானாரவர்கள் பாவவிமோசனத்திற்கான எந்ததோர் பாதையைக் காட்டியிருக்கிறார்களோ அதைவிட மேலான பாதை கிடைத்தலரிதாகும். மனித சுபாவத்தில் எண்ணிறந்த பலஹீன ஊழல்கள் உண்டு. குத்ஸியாவர்க்கத்தில் உள்ள ஒரு சிலரைத்தவிர வேறு எவரும் பிழைதப்பிற் குட்படாதவர்கள் இருக்க முடியாது. இறைவனது பயபக்தர்கள் தங்களால் ஏற்பட்ட பிழை குற்றங்களை அறிந்த பின்னர் உண்மையாகவே அலட்டிக்கொண்டு விடுகிறார்கள். ஆதலால் நேர்மையுள்ளோர், தவறு அறிந்த பின்பு உடனே நற்கருமத்தை மேற்கொள்வதே சிறந்த பரிகாரம்.''

நல்லவர், கெட்டவர் பாகுபாடு.

ஹஸரத் அபூ உபைதா விவரிக்கிறார்கள்:—

நல்லவர், கெட்டவர் இவ்விரண்டிற் கிடையில் உள்ள பாகுபாடு எவ்வாறு கண்டுபிடிப்பதென்று நான் ஒரு நாள் நபிநாயகம் (ஸல்) அவர்களைக்கேட்டபோது, அவர்கள் பதிலளித்ததாவது:—

"நீண்ட ஆயுளுடன் நல்ல அமுலுகளை மேற்கொண்டவர்களை நன்மையாளிகள் என்றும், நீண்ட ஆயுளுடன் கெட்ட அமுல்களில் ஈடுபட்டிருப்பவர்களை தீயர்கள் என்றும் கண்டு பிடித்தல் வேண்டும்'' என விடை பகர்ந்தார்கள்.

இது பற்றிய மற்றொரு ஹதீது:—

"உங்களுக்கிடை யாரால் நன்மைக்குரிய நம்பிக்கை ஏற்படுகிறதோ அவரை நல்லவர் என்றும் இன்னும் யாரால் கெடுதலுக்குரிய சந்தேகமுண்டோ அவரை கெட்டவர் என்றும் தெரிந்து கொள்ளுங்கள்.''

ஸ்திரீயின் உயரிய அந்தஸ்து.

மூடபக்தி நிறைந்திருந்த பண்டைகாலத்தில் ஸ்திரீயின் க்ஷீண நிலை எவ்வளவு சீர்கேட்டடைந்திருந்த தென்பது வெளிப்படை. மிருகங்களின் நிலைமையும் ஸ்திரீகளின் நிலைமையும் சம அந்தஸ்தையே அடைந்திருந்தன.

எந்தெந்த கொடுமை அதிக்கிரமங்களோடு பழக புருஷர்கள் எண்ணினார்களோ தம் சக்திக்கு மேற்பட்டே அவ்வாறெல்லாம் நடத்தி

விட்டார்கள் இறுதியாக அவர்கள் மீதுள்ள கொடுங்கோன்மைகளை நிவர்த்தித்து அவர்களை க்ஷீணதசையின் நின்றும் உயர்தசைக்குக் கொண்டு போனவர்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களே யாவர்கள் என்பது வெளிப்படை. ஒரு நாள் நபி பெருமானவர்கள் ஸ்திரீ வர்க்கத்தினரை ஆதரித்து பேசுகையில் குறிப்பிட்டதாவது "உங்களுக் கிடையாரேனும் ஒருவர் தாம் மணந்து கொள்ளப்போகும் மனைவியை உள்ளூரிலிருந்து வெளியூருக்கு அழைத்துச் செல்வதில்லை என்ற ஷரத்துகளுடன் நிக்காஹ் செய்து கொண்ட பின்பு தம் மனைவியின் சம்மதமில்லாமல் அவளை தம் இஷ்டத்திற்கு மாத்திரம் அழைத்துக் கொண்டுபோக உரிமை வாய்ந்திருக்க வில்லை" என்று பலமாய் கண்டித்து மொழிந்தார்கள்.

முதல்லல் கோஷா நாமா

(புதிய பதிப்பு)

கோஷா பர்தா விஷயத்தைப் பற்றி ஹக்தஆலாவின் கலாமாகிய தலீல்களிலும் நமது நபி நாயகமவர்களின் திருமொழியாகிய ஹதீஸுகளிலும் வந்திருப்பவைகளை கல்விக்கடல்களாகிய முஹத்திஸின்களும் முபஸ்ஸிரீன்களும் முஜ்தஹிதீன்களும் தெண்டித்து விபரித்தெழுதி யிருப்பவைகளில் சிலதை சுருக்கமாக சேகரித்தெழுதி **முதல்லல் கோஷா நாமா** வென்று பெயர் வைத்து தற்கால ஆலிம் மவ்லவிகளில் மஹான்களாகிய பத்து உலமாக்கள் பார்வை யிட்டு அச்சிடப்பட்டது. இவைகளெல்லாம் வசனமாக கூறப்பட்டு இருக்கின்றன.

பின்பு இவைகளெல்லாம் சுலபமாக மனதில் வைத்துக் கொள்ளும் பொருட்டு பாடல்களாக போடப்பட்டு இருக்கின்றன.

இதன் விலை அணா 8

ஷை அறபுத் தமிழ் விலை அணா 12

கிடைக்குமிடம் :—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.

மாயமாய்

மறைந்த மங்கை.

(தொடர் கதை 2–வது பகுதி)

3-வது அத்தியாயம்

ஷம்ஸ், தனது மேல்கிடந்த பிணத்தைக் கீழே கிடத்தி பக்கத்தில் குனிந்து கவனித்தார்.

"4 நாட்களுக்குமுன் நடந்திருக்கலாம். சனிக்கிழமைமாலை கான்ஸ் டேபிளுடன் இவன் பேசியபின், இவ்வீட்டினுள் நுழைந்திருக்கலாம். பின்னால் நின்று யாரோகுத்திவிட்டார்கள்"

"எதற்காக இவ்வாறு கொலைசெய்யப்பட்டான்" என்று சோடே யோசித்துக் கொண்டிருக்கும் போது ஷம்ஸ் கொலையுண்டு கிடப் பவனின் ஜேபிகளை யெல்லாம் சோதித்தார்.

"எதற்காக வெஸ்டர் பீ இவ்வீட்டினுள் வரவேண்டும்? தான் பாதுகார்த்துக் கொண்டிருந்த பணக்காரன் ரேனிபர்க் இவ்வீட்டினுள் நுழைந்து திரும்பி வாராததால், ஏதும் ஆபத்து நேரிட்டிருக்கு மென்று பயந்து, ஜன்னல் வழியாக நுழைந்திருக்கலாமோ? ரேனிபர்க் எங்கே? அவனுக்கு என்ன நேர்ந்ததோ?" இவ்வாறெல்லாம் யோசித்தும் ஒன்றுக்கும் பதில் தெரியவில்லை.

"எதற்கும் நீ டெலிபோன் எங்கிருக்கிறதென்று பார்த்து, போலீஸுக்கு தெரியவை" என்றார். சோடே சென்றதும், வெஸ்டர்பி யின் தோளில் குத்தப்பட்ட கத்தியின் கைபிடியில் ஏதாவது கை ரேகை தெரிகிறதா வென்று பார்த்தார். ஒன்றும் கிடைக்கவில்லை. பீரோவின் கைப்பிடியையும் பார்த்தார். கிடையாது. "கொலைசெய் தவன் கைகளில் கிளவ்ஸ் போட்டு இவ்வேலை செய்திருக்கவேண்டும் அல்லது வேலை முடிந்தபின் கைகுட்டையால் கைரேகை ஒன்றும் தெரியாதிருக்க துடைத்திருக்க வேண்டும்" என்று எண்ணினர். அந்த பீரோவின் மறுகதவையும் திறந்து பார்த்தார். அதில் 3 சூட்டுகள் தொங்கவிடப்பட்டிருந்தன. கீழ் அறையில் ஷர்ட்டுகளும், காலர் களும், கைகுட்டைகளுமிருந்தன. ஒன்றிலாவது வண்ணன் குறி யில்லை. கோட்ஜேபிகளிலும் ஒன்றுமில்லை. டுவீட்கோட்டுகளின் கைகளை கவனித்தார். அதில் 2 கோட்டுகளின் கைகளின் உள்புற நுனிகளை

கூர்ந்து கவனித்தார். பின் தன் ஜேபியிலிருந்து பூதக்கண்ணுடியை எடுத்து அதன் மூலமும் கவனித்தார். ஏதோ கண்டு பிடித்ததாக தலையை அசைத்துக்கொண்டு கோட்டுகளை முன்யிருந்தபடி மாட்டினுர். பின்பு அவ்வீட்டில் எந்தபாகத்தையாவது பார்க்க விட்டுவிட்டோமா வென்று யோசித்தார். ஆம்! தாம் பின் சமையலறை வழியாக வந்ததை யோசித்து, வெஸ்டர்பி வந்த ஜன்னலுள்ள அறையை கவனிக்கவில்லை யென்று நினைத்து திரும்பி வந்தார். வரும்வழியில் படிக்கட்டுகளின் கீழ் ஒருகதவு தெரிந்தது. அதைத் திறந்தார். அங்கிருந்து படிக்கட்டு கீழாக போவதை பார்த்தார். அதின் வழியே இறங்கலாமென்றி ருக்கும் போது தெருவில் ஒருகார் வந்து நின்ற சப்தம் கேட்டது. சோடே வந்திருப்பானென்றும் முன் கதவைதட்டுவான் என்றும் எதிர் பார்த்தார்.

அவ்வாறே "போலீஸ் இன்ஸ்பெக்டர் பாட்கின்க்கு விஷ யத்தைத் தெரிவித்தேன். அவர் புறப்பட்டு வருகிருராம். வேறு ஏதும் கண்டு பிடித்தீர்களா?" என்று சோடே கேட்டான். "அந்த அறையில் வசித்துக் கொண்டிருந்தவனே வெஸ்டர்பியை கொன்றிருக் கிருன். சரி, ஒரு படிக்கட்டு கீழாக போகிறது. அதைப் பார்க்கலாம் வா. உன்னிடம் டார்ச்யிருக்கிறதா?"

சோடே டார்ச்கொடுத்தான். அதை ஷம்ஸ் வாங்கி ஏற்றிக் கொண்டு படியின் வழியாக இறங்கினுர். பின்னுல், சோடேவும் போனுன். கீழே அநேக நாற்காலிகளும் ஒரு மேஜையும் அதன் மேல் கிராமபோன் ரெகார்ட் எடுக்கும் மெஷின் "டிக்டபோன்" (பேசுவதை ரெகார்ட்டில் பதிவுசெய்யும் மெஷின்) ஒன்றும் இருந்தது. எலக்ட்ரிக்லைட்களும் யிருப்பதைப்பார்த்து, ஸ்விட்சை தேடி போட்டார். விளக்கு எரிந்தது. ஒரு நாற்காலி சுவற்றினேரமாக யிருந்தது. அதைச்சுற்றி 5 நாற்காலிகள் வட்டமாக போடப்பட்டி ருந்தன. அந்த டிக்டபோனைமறைக்க ஒரு துணி திரையும் இருந்தது. ஆனுல் அது ஒதுக்கப்பட்டிருந்தது. சுவற்றினேரமாக யிருந்த நாற் காலியின் கீழ் ஒரு கயிறு துண்டு கிடப்பதைப் பார்த்து, "இந்நாற் காலியில் யாரையே கட்டிவைத்திருந்தார்கள் போலும். ரேனிபர்க் கையா?" என்று சொல்லி சிந்திக்கலானுர். பின்பு டிக்டபோனை கவனித் தார். அதன் பக்கத்தில் அநேக ரிகார்ட்டுகள் யிருந்தன. ஆனுல் ஒன்றை யாவது உபயோகிக்கப்படவில்லை "யாரையோ கட்டிப் போட்டு அவனைச் சூழ்ந்து 5 நபர்கள் உட்கார்ந்திருக்கிருர்கள். அதுவுமல்லாமல் இந்த திறையின் பக்கத்தில் ஒரு பெண்ணும் யிருந்திருக்கிருள்" என்று ஷம்ஸ் யோசித்தவாறு சொன்னுர்.

"ஒரு பெண்ணு! ஒரு பெண்ணும் யிருந்தது தங்களுக்கு எப்படி தெரியும்?"

"ஒரு பெண் இதில் சேர்ந்திருக்கிறுள். அவளுக்கு இந்த டிக்டபோனை கவனிக்கும் வேலையாக யிருக்கும். அந்த மூலையில் தூசியில் காலடி தெரிகிறதே. சிறியகாலடி"

"ஆம்! இந்த மிஷினில் எதை ரெகார்ட் மூலம் எடுத்தார்கள் என்பது தெரிந்தால் நலம். ஆனுல் எடுத்த ரெகார்டைகொண்டு போயிருப்பார்கள், அல்லது உடைத்து போட்டிருக்ககூடும்."

"இருக்கலாம்" என்று ஷம்ஸ் சொல்லும் போது, வாயற்கதவு தட்டும் சப்தம் கேட்டது. "போலீஸ் வந்திருக்கலாம். வா" என்று சொல்லி வாயலருகே வந்தார்கள். அங்கு போலீஸ் இன்ஸ்பெக்டர் பாட்கின், ஒரு சாதாரண உடை அணிந்த போலீஸ் ஆள், ஒரு சார்ஜென்ட், ஒரு கான்ஸ்டேபிள் வந்தார்கள். அவர்களுடன் ஒரு குள்ளமான மனிதரும் வந்தார். அவரை பாட்கின் ஷம்ஸுக்கு, போலீஸ் டாக்டர் என்பதாக அறிமுகப்படுத்தினுர்.

பாட்கின், ஷம்ஸின் பழைய சிநேகிதராயிருந்ததால், ஷம்ஸ் யாதொரு அதிகாரமின்றி இவ்வீட்டினுள் நுழைந்தது தவறு என்று தெரிந்திருந்தும் அவரை ஏன் அவ்வாறு நுழைந்தாய் என்று கேட்கவில்லை. அந்த ஹாலில் சார்ஜென்டையும் கான்ஸ்டேபிளையும் விட்டுவிட்டு, மற்றவர்கள் கொலையுண்டமனிதன் கிடக்கும் அறைக்குச் சென்றுர்கள். அவ்வுடம்பை டாக்டர் பரிசோதித்து வெஸ்டர்பீ இறந்த நேரம் ஷம்ஸ் சொல்லியபடி இருக்கலா மென்றுர். பிறகு எழுந்து "ஷம்ஸ்! இக்கொலை யார்செய்தானென்று தெரியுமா" என்று கேட்டார்.

" இவ்வீட்டின் சொந்தக்காரனே அல்லது இவ்விடத்தில் குடக்கூலிக்கு இருந்தவனைப் பற்றியோ நமது இன்ஸ்பெக்டருக்கு தெரிந்திருந்தால், அவரால் சொல்லக்கூடும். அந்த பீரோவில் தொங்கிக் கொண்டிருக்கும் உடைகளை அணிபவன்தான் கொலை செய்தவனென்றும் அவன் இடதுகை வழமையுடையவனென்றும் என்னுல் தற்போது சொல்ல முடியும்" என்றுர்ஷம்ஸ்.

"உங்களுக்கு எப்படி தெரியும்? என்று இன்ஸ்பெக்டர் கேட்டார். "இந்த கத்தி எவ்வாறு இறங்கியிருக்கிறதை கவனியுங்கள். வலது புறமாக இறங்கியிருக்கிறது. அதுமாத்திரமல்ல. அதோ தொங்கிக் கொண்டிருக்கும் கோட்டுகளின் கைகளின் உள்புறநுனிகளை கவனியுங்கள். உங்களுக்கே தெரியும். அவன் இருகைகளையும் உபயோகிக்கக் கூடியவனுக இருக்கலாம். இருந்தாலும் அவன் செய்யும் வேலைகளெல்லாம் எழுதுவது முதற்கொண்டு இடது கையாலேயே செய்துவருபவன். அவன் யார்? பாட்கின்!"

"எனக்குத் தெரியாது. இவ்வீடு ஒன்றிரண்டு மாதங்களுக்கு முன் காலியாக யிருந்தது தெரியும். அப்போது தாம்ஸன் தெருவிலுள்ள ஸ்டீவ்ஸ் என்னும் இவ்வீட்டின் ஏஜென்ட், "குடிக்கூலி விடப் படும் அல்லது விற்கப்படும்" என்று போர்ட் இங்கு போட்டது தெரியும். நான் தற்போது ஒருவனை ஸ்டீவ்ஸ்யிடம் அனுப்பி விசாரிக்க சொல்லி யிருக்கிறேன். அவன் சீக்கிரம் திரும்பி வருவான்."

பின்பு ஷம்ஸ் அவ்வீட்டின் பின்புறம், தோட்டம் இவைகளை யெல்லாம் கவனித்துக் கொண்டிருந்தார். போலீஸ், அங்கு கீழ் அறையில் வுள்ள நாற்காலிகள், டிக்டபோன் முதலியவைகளைப் பார்த்து ஏதேதோ யோசித்துக் கொண்டிருந்தனர். இதற்கிடையில் ஸ்டீவ்ஸ்யிடம் அனுப்பியவன் மோட்டார்சைகிலில் திரும்பி வந்தான். ஆனால் அவன் கொண்டு வந்த சமாச்சாரம் பிரயோஜன மில்லாதது. "ஒரு உயரமான மனிதன், கண்களில் லைட் கலருள்ள கண்ணாடி யணிந்தவன், பேசுவதைப் பார்த்தால் அமெரிக்காவி லிருந்து வந்தவன் போல் தோன்றியதாம். அவன் சுமார் 2 மாதங்களுக்கு முன் ஏஜென்டிடம் வந்து தனது பெயர் ஜான்ஸன் என்றும், அவ்வீட்டைப் பார்க்க வேண்டு மென்றும் சொன்னானும். அவ்வீட்டைப் பார்த்த பின் தனக்கு பிடித்திருப்பதாகவும் 6-மாத குடிக்கூலி பணத்தை முன்பே அட்வான்ஸாக கொடுத்தானும். அவனும் ஒரு பட்லரும் இவ்வீட்டில் வசித்து வந்தார்களாம். இவ்வீட்டில் ஒன்றிரண்டு ரிபேர் செய்ய வேண்டு மென்று தெரிவித்ததின் பேரில், ஏஜென்ட் தங்கள் ஆட்களை அனுப்பி அவைகளை சரி செய்தார்களாம். அச் சமயத்தில் வீட்டில் பட்லர் மாத்திரம் தான் இருந்தானும். இவ்வீட்டிலுள்ள கட்டில் மேஜை நாற்காலி முதலியவைக ளெல்லாம் வாடகைக்கு வாங்கினவைகளாம்."

"வாடகைக்கா? எந்த கம்பெனியி லிருந்து?" பாட்கின் கேட்டார். "பென்டன் கம்பெனியி லிருந்து. நான் அவர்களுக்கு போன் செய்தேன். ஜான்ஸன் என்பவனுக்கு கட்டில் மேஜை நாற்காலி முதலியவைகளை வாடகைக்கு கொடுத்தார்களாம். நம்பிக்கைக்காக வெஸ்ட்லென்ட் பாங்கில் தனக்கு கணக்கு யிருப்பதாக தெரிவித்தானும். பென்டன் கம்பெனிக்காரர் வெஸ்ட்லென்ட் பாங்கில் விசாரித்ததில் ஜான்ஸன் கணக்கில் 5000 பவுன்ட் யிருப்பதாக தெரிவித்தார்கள். சென்ற சனிக்கிழமை மரசாமான்களுக்காக வாடகை வகைக்கு ஒரு செக் கிடைத்ததாம். அதை பாங்க்குக்கு அனுப்ப, பாங்கில் ஜான்ஸன் கணக்கை மூடி விட்டதாக செக் திரும்பியதாம்"

"ஓஹோ! அப்படியானல் ஜான்ஸன் இன்னும் 2-3 நாள் யிருக்க லாம் என்று யோசித்திருப்பான். இந்த கொலை விஷயம் ஏற்படவே

திங்கட்கிழமை காலையிலேயே பாங்க் கணக்கையும் முடித்து விட்டு ஓடியிருப்பான் " என்று ஷம்ஸ் சொன்னார்.

" பாங்கில் விசாரித்தால் ஏதாவது தெரியலாம் " என்று பாட்கின் சொல்ல, " இவன் ஓடும் போது தனது கோட்டிலுள்ள தையற்காரன் பெயருள்ள துண்டு துணிகளைக் கிழித்து எடுத்துக் கொண்டு போயிருப்பதைக் கவனித்தால், மிகவும் முன் யோசனையுடன் வேலை செய்திருப்பதாக தெரிகிறது. ஆதலால் பாங்கில் விசாரித்தாலும் நமக்குப் பயனளிக்கும் விஷயம் ஒன்றும் கிடைக்காதென்று நினைக்கிறேன் " என்று ஷம்ஸ் பதிலளித்தார்.

" நான் லன்டன் போலீஸ் ஸ்காட்லன்ட்யார்டுக்கு தெரிவித்து உதவி தேடப் போகிறேன். வெஸ்டர்பி எனக்கு மிக பழக்கமானவன். அவனைக் கொன்றவனை கண்டு பிடிக்காமல் விடப் போவதில்லை." என்று பாட்கின் ரோஷத்துடன் சொல்லி " நான் நேரே போலீஸ் ஸ்டேஷனுக்கு போய் போன் செய்ய போகிறேன். நீங்களும் அங்கு வருகின்றீர்களா ?" என்று ஷம்ஸைக் கேட்டார்.

" சரி வருகிறேன் " என்று ஷம்ஸ் சொல்லிக் கொண்டே, தான் போக் ஸ்டோனுக்கு இரு வேலைக்காக வந்ததில் இச்சம்பவம் மற்றொரு வேலையை மறக்கச் செய்ததை நினைத்தார்.

" நான் இன்னொரு விஷயம் விசாரிக்கச் சொன்னேனே, அதை கவனித்தீர்களா ?" என்று ஷம்ஸ் காரை ஓட்டிக் கொண்டே, தனது பக்கத்தில் உட்கார்ந்திருந்த இன்ஸ்பெக்டர் பாட்கினைக் கேட்டார். காரின் பின்புறம் சோடே உட்கார்ந்திருந்தான்.

" ஓ காணமற் போன பெண் விஷயமாகவா ? எல்லா ஆஸ்பத்திரிகளிலும் விசாரித்தேன். இந்த வாரத்திலேயே அடிபட்ட கேஸ் ஒன்றும் வரவில்லையாம். ஒலிவாவை விபரித்தேன். அதைப் போல் ஒரு பெண்ணும் இல்லையாம் " என்று பதிலளித்தார்.

இன்ஸ்பெக்டர் பாட்கின் லண்டனுக்கு போன் செய்து அங்குள்ள போலீஸ் துப்பரிபவர்களில் முதன்மையானவர்களை வரவழைக்க ஏற்பாடு செய்து கொண்டிருக்க, ஷம்ஸ் தனது காரை ஸன்கோர்ட் டெர்ரஸ் பக்கமாக ஓட்டினார். 6 நெ. வீட்டிற்கு முன் கார் மெதுவாக வரும்போது அவ்வீட்டி லிருந்து ஒரு ரொட்டிகார பையன் முன் இரும்பு கேட்டை கொஞ்சம் திறந்தவாறு வாயில் சிட்டி ஊதிய வண்ணம் வெளியே ஓடினான். அப்பொழுது இவர்கள் கார் அங்கு மெதுவாக வந்து நிற்பதற்குபதிலாக திடீரென்று வேகமாக ஓடியதை பின்னிருந்த சோடே கண்டு ஆச்சரியத்துடன் " என்ன விஷயம் ?" என்று கேட்டான். ஷம்ஸ் காரை பக்கத்து தெருவில் நிற்பாட்டிய

பின், "வெஸ்டர்பி கொல்லப்பட்ட வீட்டின் முன் கார் பழைய டைர் பதிவு பார்த்த ஞாபக மிருக்கிறதா? அதே கார் டைர் பதிவு இவ்வீட்டின் முன் தெரிகிறது" என்றார்.

4-வது அத்தியாயம்.

சோடேவால் நம்பமுடிய வில்லை. ஏனெனில் இவ்வீட்டைக் கவனிக்கு மிடத்து, சாதாரணமாக ஜனங்கள் வந்து தங்கக்கூடிய கடற் கரையோரத்திலுள்ள வீடு. இவ்வீட்டிற்கும், வெஸ்டர்பி கொலைக்கும் எவ்வாறு சம்மந்தமிருக்கும்? தற்போது அவ்வீட்டினுள்ளிருந்து ஒரு பெண்ணும் ஒரு மனிதனும் வெளியே வந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களைப் பார்த்தால் ஓய்வுக்குத் தங்க வரும் வழமையான ஆட்களைப் போல் தோன்றியது. இருந்தாலும் அதே டைர் பதிவு இவ்வீட்டின் முன்னும் தெரிகிறது என்று ஷம்ஸ் சொன்னால், அது சரியாகவே யிருக்கும். இவ்வாறெல்லாம் யோசித்தவாறு "உங்கள் யோசனை என்ன?" என்று சோடே கேட்டான்.

"ஒலிவா காணமல் போயிராமலிருந்தால், அந்த காரின் டைர் பதிவு இங்கு யிருப்பதைப்பற்றி விசேஷமாக எண்ணமலிருந்து விட லாம். சாதாரணமாக ஒரு பெரிய கார் முன்னுள்ள திறந்த வெளியைக் கடந்து வீட்டின் வாயற்படிவரை போவதென்றால், ஏதாவது ஒரு கனத்த சாமானை இறக்கவோ ஏற்றவோ தான் வந்திருக்கும். இதைப் பார்த்தபின் ஒலிவாவைப்பற்றி கவலையாக இருக்கிறது" என்று ஷம்ஸ் சொல்லி, வெஸ்டர்பி சமாச்சாரம் இவளுக்கும் ஏற்பட்டு விட்டதா என்று ஆழ்ந்த சிந்தனையிலானார். பின்பு "நான் அந்த கார் டைர் பதிவைப்பார்த்ததும் என் மனது சரியாகயில்லை. நமது காரை அங்கு நிற்பாட்ட மனமில்லாமல் இங்கு ஓட்டிவந்தேன். எதற்கும் நாளை ரோஸனும் வருவார். ஆதலால் நீ நமது காரை ஓட்டிப்போய் ஏதாவது ஷெட்பார்த்து அங்கு விட்டு விட்டு, ரோஸனுக்கு டெலிபோன் மூலம் நான் ஒலிவா விஷயமாக கவனிப்பதாகவும். நான் ரோஸன் என்று சொல்லிக் கொண்டு இவ்விஷயத்தில் தலையிடப் போவதாகவும் ஆதலால் அவரை லண்டனிலேயே இருக்குமாறும் சொல்லு. கவலையும் பட வேண்டாமென்றும் சொல்" என்று ஷம்ஸ் சோடோவுக்கு சொன்னார்.

"நீங்கள் அப்படியானால் நீங்கள் தான் ரோஸன் என்று சொல்லிக் கொண்டு அவ்வீட்டினுள் போகப் போகிறீர்களல்லவா? இச்சமயத்தில் ரோஸன் வந்தால் உங்கள் காரியம் கெட்டு விடுமல்லவா?" என்று சோடே கேட்க, "ஆம்! நீ பெஸ்ட் ஹோட்டலுக்கு போய் ஒரு அறை பேசி அங்கேயே யிரும். தேவைபட்டால் உன்னைக் கூப்பிடுவேன்" என்று சொல்லி, சோடேவை அனுப்பிவிட்டு நெ. 6 ஸன்கோர்ட் டெர் ரஸுக்குப் போனார். போகும்போது "அந்த டைர் பதிவு நன்றாக

பூமியில் அழுந்தியதாக தெரிந்தது. மழைபெய்யும் பொழுது கார் வந்தால் அவ்வாறு டைர் பதியும். லண்டனில் சனிக்கிழமை இரவு தான் மழை பெய்தது. அதே நேரத்தில் இங்கும் மழை பெய்திருந்தால் அந்த கார் இவ்வீட்டின் முன் வந்தது சனிக்கிழமையாகத் தானிருக்கும்'' என்று யோசித்துக் கொண்டே அவ்வீட்டிற்கு போனார். அவ் வீட்டிற்கு முன் போகும்போது, அந்த டைர் பதிவை பார்க்காமல், அவ்வீட்டின் வாயலை நோக்கி நடந்தார். அவ்வீட்டின் வாயற் கதவு திறக்கப்பட்டிருந்தது. வாயற்படியில் நின்று கொண்டு, தான் மிகவும் பயத்தினால் கைகால் நடுக்க முறுவதாக நடித்துக் கொண்டே கதவை தட்டினார். முன் ஹாலுக்கு பக்கத்திலிருந்த ஒரு அறையிலிருந்து கொஞ்சம் வயது சென்ற ஒரு மாதுகண்ணில் கண்ணாடி போட்டவாறு வந்தாள். அவள் கருப்பு ஸில்க் உடை யணிந்து அதற்கு மேல் கருப்பு ஷால் ஒன்று போட்டுக் கொண்டிருந்தாள். காதில் இரு கம்மல்களும் கழுத்தில் ஒரு பொன் செயினும் அதில் ஒரு லாக்கெட்டும் தொங்கிக் கொண்டிருந்தது.

"தங்களுக்கு என்ன வேண்டும்?"

"இவ்வீட்டின் சொந்தக்காரியைப் பார்க்கவேண்டும். தாங்கள் தான் மேரியாவா?"

"ஆம்"

"என் பெயர் ரோஸன். இன்று லண்டனிலிருந்து ஒலிவா விஷயமாக போன் செய்தேன். அவள் எனக்கு மனைவியாகப் போகிறவள்; இங்கு வரவில்லை யென்று கேட்டதும் கவலையுடன் ஓடிவந்தேன். இங்கிருந்து போன் செய்தவர்கள் தவறாக சொல்லியிருக்கலாம்''

மேரி இரக்கத்துடன் "அவள் இங்கு வரவேயில்லை"

"அப்படியானால் அவளுக்கு என்ன நேர்ந்திருக்கும். அவள் இங்கு ஒரு அறையில் தங்குவதாக முன்பே ஏற்பாடு செய்திருந்தாளே. வேறு யாரும் அவளை இங்கு பார்த்தார்களா?"

"இல்லை அவள் வரவே யில்லையே. நீங்கள் போன் செய்ததாக இங்குள்ள வேலைக்காரி தெரிவித்தபின், நான் ரிஜிஸ்டரைப் பார்த்தேன். அதில் நான் தேதியில் ஒரு தவருதலும் செய்திருந்தேன். அதுவுமல்லாமல் நீங்களும் நாளை வருவதாக எழுதியிருந்தது."

"ஆம். ஆனால் நான் இப்பொழுதே வந்துவிட்டேன். இன்றையிலிருந்தே நான் இங்கு தங்கி அவளை தேட முயற்சிக்கலாமென்றுயிருக்கிறேன். எனது அறை காலியாக யிருக்கிறதா?"

மேரியா யோசித்தவாறு நின்ருள். ஷம்ஸ் ஹாலினுள் வந்து "எனது அறை இன்று காலியாக யில்லாவிட்டாலும் எனக்கு படுக்க எங்காவது கொஞ்சம் இடம் கொடுத்தால் இன்றுவரை சமாளித்துக் கொண்டு நாளை என் அறையில் தங்குகிறேன். ஒலிவாவைக் கண்டு பிடிக்கும் வரை என்ஞல் ஒரு யிடத்தில் தங்க முடியுமா? ஆஸ்பத்திரிக்கும் போலீஸுூக்கும் அலேவதுடன் இந்த கிராமம் பூராவும் தேட வேண்டிதுதான்" என்ருர்.

"ஆம்! உங்கள் மனது எவ்வாறிருக்கு மென்று தெரியாதா? ஏதோ சாதாரண காரணத்தினல் இங்கு ஒலிவா வராதிருந்திருப்பாள்"

"அவளுக்கு ஒன்றும் அபாயம் நேராவிடில் எனக்கு தெரிவித்திருப்பாளே. அதுவும் செய்யவில்லேயே அதுதான் கவலே" என்ருர் ஷம்ஸ். அச்சமயத்தில் அங்கு தங்கியுள்ள ஒரு மனிதன் தன் பெண் ஜாதி, பிள்ளேயுடன் வெளியிலிருந்து ஹாலுக்கு வந்து மேரியாவைப் பார்த்து சிரித்தவாறு மெத்தைக்குப் போனர்கள். இதைப் பார்த்த ஷம்ஸ் "இந்த வீடு ஒழுங்கான வீடாகத்தானிருக்கிறது. அநேக ஜனங்கள் குடும்பத்துடன் வந்துதங்குகிருர்கள். வீட்டின் சொந்தக்காரி ஒழுங்காகத் தானிருக்கிருள். ஆனல் அந்த கார் டைர் பதிவு ஒன்று தான் சந்தேகமாக யிருக்கிறது" என்று நினேத்தார். மேரியா அந்த ஹாலிலிருந்து இடது பக்கத்திலுள்ள ஒரு அறைக்குப் போனள். ஷம்ஸுூம் போனர். அவ்வறையில் நாற்காலிவகைகளெல்லாம் மிகபழைய தாகயிருந்தன. அறையின் சுவற்றிலும் பழைய படங்களும் போட்டோக்களும் தொங்கவிடப்பட்டிருந்தன. ஒரு மூலேயில் புதிய எலக்ட்ரிக் கிராமபோன் ஒன்றிருந்தது. பழைய சாமான்களாக கிடக்கும் அவ்வறையில் இந்த கிராமபோன் மாத்திரம் புதியதாக யிருப்பது ஷம்ஸுூக்கு ஆச்சரியமாக யிருந்தது.

"தாங்கள் சாமான்கள் ஒன்றும் கொண்டு வரவில்லேயா?"

"அவைகள் பின்னல் வரும்"

"தங்களுக்காக குறித்துள்ள அறை முதல் மாடியில் முன்பக்கம் யிருக்கிறது; அது நாளே தயாராகும். தற்போது 3-வது மேல்மாடியில் ஒரு சிறிய அறைதான் காலியாக யிருக்கிறது" என்று சொல்லி ஷம்ஸை கூப்பிட்டுக் கொண்டுபோய் அவ்வறையைக் காண்பித்தாள். "ஓ! இது போதும் இன்றுவரை" என்று சொல்லிக் கொண்டே, தான் ரோஸ ஊப்போல் நடிக்க வேண்டுமென்று எண்ணி, மேரியாவுடன் திரும்பி படிக்கட்டின் வழியாக வரும்போது "நான் நேராக போலீஸ் ஸ்டேஷன் போகிறேன்" என்ருர். படிகளில் இறங்கி ஹாலுக்கு வந்த சமயத்தில் பக்கத்திலுள்ள ஒரு கதவை திறந்து கொண்டு ஒரு வேலேக்காரி வந்தாள். கதவு திறக்கப்படவே பக்கத்தில் இன்னெரு ஹால் யிருப்ப

தாக ஷம்ஸ் பார்த்தார். அங்கு இருவர் சிகரேட் பிடித்துக் கொண்டு நிற்பதைப்பார்த்தார். அதில் ஒருவன் உயரமாகவும் விலையுயர்ந்த ஸூட் அணிந்தவனாக யிருந்தும் அவன் முகம் கொடூரமாக யிருந்தது. மூக்கு சப்பையாகவும் நாடி முன்னுக்கு தள்ளியவாறும் நெத்தி குரங்கு நெற்றியைப்போலு மிருந்தது. மற்றவன் மெலிந்து யிருந்தான். இவனும் விலையுயர்ந்த ஸூட் அணிந்திருந்தான். இவன் முகம் மிக ஒழுங்காக யிருந்தாலும், கண் முழியைப்பார்த்தால் அவன் எதற்கும் அஞ்சாதவன்போல் தோன்றியது. உடனே ஷம்ஸ் மறுபக்கம் திரும்பி, அவ்விருவரும் தன்னைப் பார்க்காதிருந்தால் நலமென்று எண்ணியவாறு மேரியா பின்னே போய் "பக்கத்து வீடும் இதைச் சேர்ந்ததா?" என்று சாதாரணமாக கேட்டார்.

"ஆம்! தற்போது அதிகமாக தங்க வருகிறார்கள். சிலர் வழமையாக வந்து இங்கு தங்குகிறார்கள். ஆதலால் பக்கத்து வீட்டில் வழமையாக தங்குபவர்களுக்காக ஏற்படுத்தி யிருக்கிறேன்" என்றாள். இதற்கிடையில் தான் பார்த்த இருவர் விஷயமாய் என்ன செய்யலாமென்று யோசித்தவாறு "மேரியா! உன்னிடம் ஒரு விஷயத்தைப் பற்றி தெரிவிக்க ஆசைபடுகிறேன். நான் அடிக்கடி கோர்ட்டுக்கு போவது உண்டு. பக்கத்து வீட்டிலுள்ள இருவர்கள் யாரென்று தெரியுமா? வழமையாக தங்குபவர்கள்தானே" என்று கேட்டார். அதுவரை தன் கழுத்திலிருந்த செய்னை கையால் சுற்றிக்கொண்டே யிருந்த மேரியா, கையைத் தொங்க விட்டு இருபுருவங்களும் மேல் ஏற "ஏன்" என்றாள். "உனக்கு முன்பே எச்சரிக்கை செய்வது எனது கடமை. அதில் பருமனான மனிதன், முகம் அசங்கியமாக யிருக்கிறதே அவன் பிழைப்பே திருட்டு தொழில்."

அதைக் கேட்டதும் ஆச்சரியத்தால் ஒரு அடி பின் வாங்கினாள்.

"என்ன சொல்லுகின்றீர்கள்?"

"சரியாகத்தான் சொல்கின்றேன். திருடர்களுக்குள்ளும் போலீஸ்களுள்ளும் அவன் பெயர் சாதிர் "தடியன்" என்று பிரபல்லியம். திருடுவதில் மஹா கெட்டிக்காரன்.

"ஆ! அப்படியா" என்று மேரியா சொல்லியவாறு அங்கேயே உட்கார்ந்தாள். நல்லவேளையாக பின்னால் நாற்காலியிருந்தது.

"அவன் பெயர் ஷெப்பர்ட் என்றல்லவா சொன்னான்! நீங்கள் சொல்வதை நம்பமுடியவில்லையே! திருடனா! அதுவும் என் வீட்டிலா!" என்று வாய் குழறியவாறு சொன்னாள்.

"அவன் மாத்திரமல்லவே. அவனுடன் இன்னொருவன் இருந்தானே அவனும் அதில் சேர்ந்த பேர்வழிதான். அவன் பெயர் பிரேசர்.

அவனை பொடிபிரேசர் என்றும் சொல்வர். ஒரு முறை ஜெயிலில் அவனைப்பார்த்திருக்கிறேன். ஏதோ பண இரும்பு பெட்டியை கன்னம் வைத்ததற்காக தண்டனையாம்'' ஷம்ஸ் இவ்வளவையும் சொல்லி மேரியாவுக்கு அவர்கள் உண்மையாக திருடர்கள் என்று முன்பு தெரியுமா என்று அவள் முகத்தை கவனித்தார். ஆனால் அவளோ இச் சமாச்சாரத்தைக் கேட்டதும் ஸ்தம்பித்து, பிரக்ஞையற்று விழும் தறுவாயிலிருந்தாள். உடனே ஷம்ஸ் அவள் பக்கத்தில் போய்நின்று தாங்கிக் கொண்டு, அங்கு மேஜையின் பேரிலுள்ள டம்ளரில் பக்கத்திலிருந்த தண்ணீரை ஊற்றி, அதைக் கொடுத்தார். "உனக்கு உண்மை சாமாச்சாரம் தெரிந்தால் நலமென்று நினைத்தேன். ஆனால் நீ இவ்வாறு கஷ்டப்படுவாய் என்று தெரியாது'' என்றார்.

"பரவாயில்லை. எனக்கு ஒன்றுமில்லை. ஆனால்'' என்று சொல்லும் போது அவள் கைகள் நடுங்கின. "ஆனால் நான் தற்போது என்ன செய்ய வேண்டும்?'' என்றாள் பதைபதைப்புடன். அவளை பார்க்கவே பரிதாபகரமாக யிருந்தது. அவள் கண்களிலிருந்த கண்ணாடியை கழட்டி, தனது கைகுட்டையால் கண்களைத்துடைத்தாள். தன்னை மீறி வந்த அழுகையை அடக்கினாள். "திருடர்கள்! அவர்களுக்கு போயும் போயும் எனது வீடா அகப்பட்டது! நான் எத்தனை வருஷமாக கஷ்டப்பட்டுக் கொண்டு இவ்வீட்டிற்கு எவ்வளவு நல்ல பெயரை சம்பாதித்திருக்க, இந்த நாய்கள்! என்னதைரியம் என்னை ஏமாற்ற. ஏதோ வியாபாரத்தில் பங்காளிகளாம்! லண்டனிலும் வியாபாரத்தொடர் உண்டாம்! இவர்கள் திருட்டுத் தொழில் செய்து கொண்டு, மதிப்பாக ஒளித்துக் கொள்ளுமிடம் என் வீடா? மிஸ்டர் ரோஸன், நீங்கள் வக்கீல்தானே. இச்சந்தர்ப்பத்தில் நான் என் செய்வது நலம்? எனக்கு கொஞ்சம் யோசனை சொல்லுங்கள்'' என்று கெஞ்சிக் கேட்டாள்.

"அவ்வளவு கவலை வேண்டாம். தைரியமாகயிரு. பயப்படவேண்டியதேயில்லை. அவர்களை காலியாகும்படி நோட்டீஸ் கொடு. போலீஸிடம் போய் உனது வீட்டில் 2 பேர்தங்கியிருப்பதாகவும், அவர்கள் திருடர்கள் என்று கேள்விபட்டதாக தெரிவித்து விடு. இல்லாவிடில் இப்பொழுது நான் தான் ஒலிவா விஷயமாய் விசாரிக்க போலீஸ் ஸ்டேஷனுக்கு போகிறேனே இவ்விஷயத்தை தெரிவித்து விடுகிறேன்'' என்றார்.

"வேண்டாம். வேண்டாம். அவசரப்பட்டு எதையும் செய்து விடவேண்டாம். போலீஸ் இங்கு வந்து அவ்விருவரையும் சிறை செய்தால், இச்சாமாச்சாரம் ஊர் முழுவதும் தெரிந்துவிடும். என் வீட்டின் மதிப்பு போய்விடும்'' என்றாள்.

"அப்படியானுல் உன் இஷ்டப்படி செய்" என்று சொல்லி விட்டார்.

"எனக்கு என்ன செய்ய வேண்டும், என்ன சொல்ல வேண்டு மென்றே தெரியவில்லை. இந்த வார முடிவில் தான் காலியாகுமாறு நோட்டீஸ் கொடுக்க முடியும் இதற்கிடையில் நம்மையே தூங்கும் போது கொன்று விடலாம்!" என்ருள் மேரியா.

"என்னை அவர்கள் கொலைசெய்யாமல் நான்பார்த்துக் கொள்வேன். நீயோ அல்லது வேறு இங்கு தங்கியிருப்பவர்களோ, பயப்பட வேண் டியதில்லை. சாதிரும் பிரேசரும், நீ சொல்லியபடி தனியாக ஒளித்திருப்ப தற்காக உனது வீட்டை தேர்ந்தெடுத்திருக்கலாம்" என்று தைரியம் சொல்லியபின், தான் போலீஸ் ஸ்டேஷன் போவதாகச் சொல்லி வீட்டை விட்டுப் புறப்பட்டார்.

"இருதிருடர்களும் தன்னைப் பார்த்திருப்பார்களா ? இவ்விரு வரும் வெஸ்டர்பி கொலையில் சம்மந்தப்பட்டிருந்தால், தானும் ஷம்ஸ் என்று பகிரங்கமாக சொல்லி இறங்கவேண்டியதுதான். அவர்கள் ஏன் இவ்வீட்டில் தங்கியிருக்கிருர்கள்? மறைவாக ஒளித்துக் கொள்ள வசதியான இடமென்ருே? அல்லது வேறு ஏதோ முக்கியமான காரணத் தினுல் தங்கியிருக்கிருர்களா? ஒலிவா காணுமற் போனதைப்பற்றி அவர்களுக்குத் தெரியுமா? ஒலிவா சமாச்சாரம் என்ன ஆயிருக்கும்? இவ்வீட்டிற்கே வரவில்லை யென்பது உண்மையா? அவள் வரவில்லை யென்று மேரியா சொல்கிருள். மேரியா சொல்வதைக் கவனித்தால் உண்மை சொல்வதாக தெரிகிறது. இவ்வீட்டில் மேரியாவுக்குத் தெரி யாமல் ஏதாவது ஊழலான காரியம் நடக்கிறதா? அதில் ஒலிவா சம் மந்தப்பட நேரிட்டதா? இந்த கும்பலில் ஒலிவா மாட்டியிருந்தால் உயிரோடிருப்பது அரிது. கடற்கரை யோரத்தில் தான் அவள் பிரேதம் கிடக்கும். சாதிரும் பிரேசரும் கொலைக்கு அஞ்சமாட்டார்கள். தாங்களிருவரும் எச்சங்கடத்தி லிருந்தும் தப்பிக்க எத்தனை கொலைகள் செய்ய வேண்டுமானுலும் செய்தே தீர்வார்கள்" இவ்வா றெல்லாம் ஷம்ஸ் யோசித்துக் கொண்டே போலீஸ் ஸ்டேஷனுக்குப் போனுர். பேருக்காக போலீஸ் ஸ்டோஷனுள் சென்று கொஞ்ச நேரத் திற்குள் வெளிவந்தார். ரோஸன் வந்திருந்தால் எங்கெங்கு போய் என்ன செய்வாரோ அவ்வாறு செய்து கொண்டே அம்மாலைவரை போக்கினர். பின்பு அவ்வீட்டுக்கு போகும் போது, அவ்வீட்டுக்கு பின்புறத்தில் கார்விடும் ஷெட் ஒன்றிருப்பதையும் அதன் கதவுமூடப் பட்டிருப்பதையும் கவனித்தார். அதனுள் தான் நினைக்கும் கார்யிருக் கிறதா என்று பார்க்கலாமென்று ஆவலானுர். பின்பு கவனிக்கலா மென்று வீட்டுக்குப் போய் மேரியாவினிடம், ஒலிவாவைப்பற்றி

இதுவரை ஒரு விஷயமும் அறியவில்லை யென்று வருத்தமாகத் தெரிவித்தார்.

"எனக்கும் ஆச்சரியமாகத்தானிருக்கிறது. ஸூஸியிடமும் தெரிவித்தேன். அவளும் கேட்டு ஆச்சரியப்பட்டாள்" என்று மேரியா சொன்னாள்.

"ஸூஸி ! அது யார்?"

"ஸூஸி அதிக நாட்களாக யிங்கேயே தங்கியிருக்கிறாள். அவள் புருஷன் இறந்தபின் இங்கேயே யிருக்கிறாள். அவள் புருஷன் வாட்ஸனைப்பற்றி கேட்டிருப்பீர்கள். பஞ்சு வியாபாரத்தில் ஈடுபட்டவர்."

"எனக்கு தெரியாது. இருந்தாலும் பஞ்சு வியாபாரத்தி லிருந்தவர்களுக்கெல்லாம் பெரிய நஷ்டம் ஏற்பட்டதே."

"இவர் அதற்கு முன்பே நீங்கிவிட்டார். அதனால் இவளுக்கு பணக் கஷ்டமே கிடையாது"

இவ்வாறு பேசிக் கொண்டிருக்கையில் "மேரியா! வேண்டிய சாமான்களெல்லாம் சொன்னால், கடைக்கு போன் செய்து விடுகிறேன்" என்று சொல்லிக் கொண்டு அறையினுள் வந்தாள் ஸூஸி. ஷம்ஸை அவள் பார்த்ததும் "மேரியா தனியாக யிருப்பதாக நினைத்தேன்" என்று சொல்லி சிறித்தவாறு நின்றாள். அவள் மிகவும் அழகாகவும் உயரமாகவும் அருமையான உடை அணிந்தவளாகவு மிருந்தாள்.

"மேரியா பழையகாலத்து மனுஷி. டெலிபோனில் பேசுவதே இஷ்டமில்லை. அதனால் போன் செய்வதெல்லாம் நான் தான்" என்றாள் ஸூஸி.

"மிஸ்டர் ரோஸன்! இவள் தான் நான் சொன்ன ஸூஸி" என்று மேரியா ஷம்ஸிடம் சொன்னாள்.

இதைக் கேட்ட ஸூஸி "நீங்கள்தானே ஏதோ பெண் விஷயமாக தேடி வந்தவர். நீங்கள் எனக்கு பழக்கமில்லாவிட்டாலும், உங்களைப் பார்த்ததும் பரிதாபமாக யிருக்கிறது. ஏதும் ஆபத்து நேரிட்டிராதென்று நினைக்கிறேன்" என்றாள். ஷம்ஸூம் ரோஸன் அந்த இடத்திலிருந்தால் எவ்வாறு கவலை பட்டவரா யிருப்பாரோ அதைப் போலவே நடித்தார். அதுவுமல்லாமல் ஒலிவா விஷயம் ஒன்றும் தெரியாததால் உண்மையாகவே கவலையு மிருந்தது. ஸூஸியை கவனித்ததில் அவளும் உண்மையிலேயே இரக்கப்படுவதாக தெரிந்தது.

கொஞ்ச நேரத்திற்குப்பின் மழைபெய்ய ஆரம்பித்தது. அப்பொழுது ஹாலுக்கு இடது பக்கத்திலுள்ள அறைக்கு அவ்வீட்டிலுள்ளவர்களெல்லாம் வந்தார்கள். ஷம்ஸூம் போனார். ஸூஸி அவ

ரைப் பார்த்ததும் தன் அருகாமையில் உட்காரும்படி வேண்டினாள். அவரும் அங்கேயே உட்கார்ந்து அங்குள்ளவர்களையெல்லாம் கவனித்தார். ஓய்வுக்காக வந்து அவ்வீட்டில் தங்குபவர்களை எல்லாம் பார்க்க, எல்லாரும் சாதாரண குடும்பஸ்தராகவே தோன்றினர். ஆனால் சாதிரும் பிரேஸரும் வரவில்லை. "தன்னை அவ்விருவரும் பார்த்திருப்பார்களா? அதனால் இங்கு வரவில்லையா" என்று யோசித்தார். இதற்கிடையில் அங்கிருந்த ரேடியோ கிராமபோனின் ஸ்விட்சை ஸூஸி தட்டவே, நாட்டிய வாத்தியம் வாசிக்க ஆரம்பித்தது. அதைக் கேட்டதும் சிலர் எழுந்து டான்ஸ் ஆட ஆரம்பித்தார்கள். அச்சமயத்தில் ஸூஸியும் நாட்டியமாடிக் கொண்டே வரும்போது, ரேடியோ ஸ்விட்சில் உடம்பு படவே பாட்டு நின்று விட்டது. அதே நேரத்தில் யாரோ மிக வருத்தமாக மெதுவாக சப்தமிடுவதாக ஷம்ஸ் கேட்டார். ஸூஸியைப் பார்த்து "அது என்ன சப்தம்" என்றார்.

"எனக்கு ஒன்றும் கேட்க வில்லையே" என்றாள்.

இன்னொருவர் "எனக்கும் ஏதோ வருத்தமான சப்தம் கேட்டதே" என்றார்.

ஷம்ஸுக்கு அந்த சப்தம் தன் காலின் கீழே கேட்டதாக தெரிந்தது. (தொடரும்.)

ஹஸ்ரத் ஷம்ஸ் தப்ரேஸ் அவர்களின் சரிதை

இதில் ஹஸ்ரத் ஷம்ஸ் தப்ரேஸ் அவர்களின் பிறப்பும், குழந்தை பருவமும், அவர்கள் மௌலானா ரூம் அவர்களை சந்தித்ததும், இருவர்களுக்குமுள்ள சம்பந்தமும், ஹஸ்ரத் ஷம்ஸ் தப்ரேஸ் அவர்கள் கொலையுண்டதும் விபரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் அவர்களின் குணாதிசயங்களும், அவர்களின் உபதேசங்களும் அடங்கியுள்ளன.

இதன் விலை அணா. 10

கிடைக்குமிடம்:—

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

துய்ய தொழுகை துயர் தீர்க்கும்.

விடத்தல்தீவு. எம். பி. எம். முஹம்மது காஸீம்.

துய்ய தொழுகை துயர் தீர்க்கும்—மனத்
 துகளையகற்றி துய்தாக்கும்
உய்யும் உறுப்பை உயர்வாக்கும்—நனி
 உண்மை நிலையில் ஒளி தேக்கும் (1)

பாவங்களைந்து யிறை பதமருளும்—புனித
 பக்திப்பரவசம் காட்டிவிக்கும்
காவல் இறையைத்தினம் நோக்கும்—பிற
 காட்சிப் பொருளை அவம்மாக்கும் (2)

கோபம் கொடுமை கொலை களவு—பொய்
 கோளுடன் சூது நீழ்வாதுமற்றும்
போதம் பணித்த மறைத் தொழுகை—நீர்
 பூண்டால் அகன்றிடும் புன்மைகளே (3)

மடைத்தனமாய் கைமருட்சியுடன்—வினை
 மல்கும் அறியாமை மாழ்ந்திடவே
சடைத்திடா வண்ணம் தொழுகைதனை—நீர்
 சாரும் யிறையின் ஜயம்பெறவே (4)

முஸ்லிம்கள் தங்கள் முதல்வேலை—தொழுகை
 முந்தி தொழுது குர்ஆன்முறை பேணல்
தஸ்லிம் வணக்க நபியுரைத்தார்—தீன்
 தாங்கிய மக்கள் கடமை யென்றே (5)

சாந்திவகுத்து தனிமறையாம்—குர்ஆன்
 சகத்தினில் மானிடர் நெஞ்சிருளை
காந்தியளித்து அகற்றிவைக்கும்—நீர்
 கருணைத் தொழுகை கடைப்பிடியும் (6)

மானில வாழ்க்கை நொடிமறையும்—மனு
 மருண்டு விடாமல் துனியாப்பாசமதில்
வானில் பறவைபோல் சொக்காமல்—நீர்
 வாழ்த்தும் தொழுகை கடைப்பிடிப்பீர் (7)

ஸிராஜுஸ் ஸாலிகீன்.

[கஸ்ஸாலி இமாம் (றஹ்) அவர்களியற்றியதை உர்துவிலிருந்து
அய்யம்பேட்டை S. அப்துர் றஸாக் ஸாஹிப்
அவர்களால் தமிழில் மொழி பெயர்த்தது.]

வினா:—"கல்வியைக்கற்பது முஸ்லிமான ஒவ்வொரு ஆண்பெண் பேரிலும் கடமையாகும்" இவ்வாறு ஹஸரத் (ஸல்) அவர்கள் ஆக்ஞாபித்துள்ளார்கள். இதற்கு விளக்கம்யாது? இபாதத் (வணக்கம்) காரியத்திற்காகவும் (இல்மு) கல்வி அவசியமா?

விடை:—3-வகையான இல்முகளைக் கற்பது முக்கியம். (1) இல்மே தவ்ஹீத் (ஏகத்துவக்கல்வி) (2)இல்மே ஸிர்ர் (மறைவான கல்வி) (3) இல்மே ஷரீயத் (மார்க்கக் கல்வி)

வினா:—தவ்ஹீத் என்னும் ஏகத்துவ கல்வியை கிதாபுகளை வாசிப்பதிலிருந்து அடையமுடியாதா? அல்லது உஸ்தாத் அவசியமா?

விடை:—உஸ்தாத் (ஆசிரியர்) சுலபமான முறையில் பயிற்சியளித்து ஒவ்வொன்றையும் விளக்கிக்காட்டக்கூடியவர்; அவர் மூலமாய் செவ்வனே தெரிந்து கொள்ளலாம்.

ஆயினும், எல்லாம் வல்ல தயாபரன், தன் அருளினால், ஒருவருக்கு மறைவான ஆசிரியப்பயிற்சி யளித்தலும் சாத்தியமாகும்.

வினா:— 'தவ்பதுன்னஸூஹ்' என்பது யாது? அடியான் எவ்வாறு தன் பாவங்களைவிட்டும் விடுதலை யடையக்கூடும்?

விடை:—தவ்பாச் செய்வதானது உள்ளத்தை பாவங்களைவிட்டும் துப்புரவுபடுத்துவதாகும். என் பீரோமுர்ஷித், ஹஸ்ரத் ஷைய்க் அபுல் முஆலி (ரலி) தவ்பா விஷயத்தைக் குறித்து "தவ்பா, பாவங்களைவிட்டு விடுவதாகும். அப்பால் தவ்பாச் செய்தவன் பாவமான செயலைவிட்டும் தன்னை காத்துக்கொள்ளவேண்டும். உள்ளத்தில் அல்லாஹ்உடைய அச்சத்தை கொள்ளவேண்டும்" என்று உபதேசித்துள்ளார்கள்.

அதைப்பற்றி ஷரத்துகள் பின்வருமாறு:—

(1) தவ்பாச்செய்பவன் 'நான் மீண்டும் பாவங்களைவிட்டும் விலகியிருப்பேன்' என்ற உறுதிப்பாடு செய்துகொள்ளவேண்டும்.

அப்படியில்லாமல், அவன் தன்னால் எதிர்காலத்திலும் பாவங்கள் ஏற்பட்டாலும் ஏற்படலாம் என்ற சந்தேகத்துடன் உறுதிப்பாடுஇல்லாமல் தவ்பாச் செய்தால் அவனை பாவங்களைவிட்டும் விலகுபவன் என்று

மட்டும் சொல்லலாம். அப்போது அவன் தவ்பாச் செய்தவன் ஆக மாட்டான்.

(2) ஒருவன், தான் செய்த பாவத்திற்காக தவ்பாச் செய்கிறான். ஆனால், அவன் ஏற்கனவே அம்மாதிரியான பாவத்தை என்றும் செய்யாமல் இருந்திருந்தால் அவனை தாயிப் (தவ்பாச்செய்பவன்) என்ற பெயரைக்கொண்டு சொல்வதற்கில்லை. "முத்தகீ" (தக்வா உள்ளவன் அதாவது உபவாசி) என்றே கூறத்தகும்.

ஹஸ்ரத் (ஸல்) அவர்களுக்காக தாயிப் (தவ்பாச் செய்பவர்) என்ற வார்த்தை உபயோகிக்க முடியாது. ஏனெனில், அவர்களைக்கொண்டு "குப்ரு" உடைய செயல் ஆரம்ப காலமுதல் என்றும் வெளியாக வில்லை.

'தாயிப்' என்ற மொழியானது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் வரலாறு சம்பந்தமாக உபயோகிக்கலாம். ஏனெனில், அவர்களால், இஸ்லாத்திற்கு முன்னர் 'குப்ரு' சம்பந்தப்பட்ட செயல்கள் வெளியாயிருந்தன.

(3) ஒருவன் தான்செய்த முந்தின பாவத்தைப்போல், பிந்தியும் செய்துவிட்டு நிபந்தனைகளின்படி தவ்பாச் செய்கிறான்.

உதாரணமாக வயது முதிர்ந்த வயோதிகன் ஒருவன் தன் வாலிபத்தில் விபசாரத்திலும், களவு செய்வதிலும் ஈடுபட்டிருந்தான். இப்போது அவன் ஏற்கனவே தான் செய்துள்ள பாவமான காரியங்களைக் குறித்து தவ்பாச் செய்தல் பொருத்தமானதே. ஏனெனில் தவ்பாவின் அங்கீகார வாயல் அடைபட்டுப்போகவில்லை.

வினா:—மேதாவிகளை தரிசிப்பதும் அவர்களைப்பற்றி உரைப்பதும் பற்றிய உத்தரவு என்ன?

விடை:—அவர்களை தரிசித்தலும் அவர்கள் மதபோதனைகளை பின்பற்றி நடத்தலும் வல்ல நாயன் சமீபத்தை அடைவதாகும். அதன் மூலம் அநேக நன்மைகள் உண்டு. ஆனால், எப்போதுமே அவர்கள் தரிசனையில் நேரத்தை போக்கலாகாது. வீண்வார்த்தைகளை திரித்துப் பேசுவதும், புறங்கூறுதலும் கூடா. அப்படிச்செய்தால் தம்மையும் அவரையும் பாவத்திற்குள்ளாக்குவதாகும்.

வினா:—நப்ஸ் என்னும் துர்இச்சையை எவ்வாறு கீழ்ப்படுத்துவது? இதை யாதொரு உபாயத்தின்கீழ் கடிவாளத்திற் குட்படுத்த வேண்டும். அது எப்படி?

விடை:—அது மிகவும் தந்திரமுள்ள காரியம்-முதலில் அதை சாந்தப்படுத்த வேண்டும். அப்பால் அதில் கடிவாளம்போடுவதற்கு ஏதுகாமுண்டாகும். சுகானுபவங்கள், இன்பங்கள் ஆகியவை அதற்

குரிய தீனி-அத்தீனியைவிட்டும் அதை விலக்கிவைத்தால் தன்னாலே அது சாந்தமடையும்.

இரண்டாவது:-அதன்மீது இபாதத்(வணக்கம்)திற்குரிய சுமையை ஏற்றிவிட்டால் அது சுமை ஏற்றப்பட்ட கழுதையைப்போலாகிவிடும். அத்தோடு, மேற்சொல்லியபடி அதன் தீனியும் இல்லாமற்போனால் அது அவசியம் கீழ்ப்பட்டுத்தீரும்.

மூன்றாவது:-அல்லாஹ்விடத்தில் துவாச்செய்யவேண்டுமே யல்லாது நப்ஸிற்குமுன் குனியவேண்டாம். இல்லையேல், அதன் துஷ்டத்தனத்தை விட்டும் விடுதலைப் பெறுவதில் திண்டாட்டமாகிவிடும்.

"நிச்சயமாக நப்ஸானது உங்களை கெட்ட கருமங்களைச் செய்ய வற்புறுத்தும் அல்லா யார்பேரில் கிருபை செய்கிறானோ அவனே அதை விட்டும் தப்பித்துக் கொள்வான்" என்று மஹான்களே கூறியுள்ளார்கள்.

வினா:—ஆரம்பத்தில் ஓர் அமுலை மேற்கொள்ளும்போது அதைப் பற்றி சுய நம்பிக்கை வைப்பது ஜாயிஸ் ஆகுமென்றும் அதை பூர்த்தித்து வைக்கும்போது "இன்ஷா அல்லா" சொல்லி அக்காரியத்தை ஆண்டவன் பொறுப்பாக்கி விடுவது "வாஜிப்" ஆகும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறதே அது எப்படி?

விடை:—ஆரம்பத்தில் யாதொரு அச்சம் இல்லை. அமுலு பூர்த்தியாகும்வரையிலோ அதற்கு இருவகை அச்சம் உண்டு.

முதலாவது அச்சம், அடியான், அதை பூர்த்திசெய்து வைப்பது சாத்தியமா? அல்லது அசாத்தியமா என்பதை முன்னரே தெரிந்து கொள்ளும்படியான அறிவு படைத்திருக்கவில்லை.

இரண்டாவது அச்சம், அவன் அமுல் ஒருக்கால் பாஸிக் (கெடுதி) ஆய்விடுமோ என்பது. மேலும் அந்த அமுலின் முடிவு சாதகத்தைக் கொண்டதா அல்லது பாதகத்தையா? என்பதும் அவனுக்குத் தெரியவராது. இதுவே அதற்குக் காரணம்.

வினா:—ஒருவன் தன் விருப்பத்திற்குரிய துறையில் ஹலாலான பொருளை ஆசிக்கிறான். இவ்வாறு ஆசித்துப் பெறுதல் பாவமா இல்லையா?

விடை:—கிரமமான காரியத்திற்கு பொருளை வேண்டுதல் சிறந்த காரியம். இது நன்மை பயக்கும். ஆனால் நப்ஸ் (துர்இச்சை) விருப்பத்தை பூர்த்தித்துக்கொள்ள அவன் பொருள் வேண்டுவானாகில் அது பாவமாகும்.

187023

வினு :—அடியான் எச்சமயத்தும் தன் ஜீவனும்சத்திற்காக அல்லாவை வேண்டிக் கொள்வது தகுதியாகுமா ?

விடை :—ஜீவனும்சம் உடலுக்குரிய தீனி. அந்த உடலின் இருத்தலானது மரணம் ஜீவித்தலைச் சார்ந்தது—இது அல்லாவின் பிரியத்திற்குட் பட்டிருப்பதைப் போலவே அடியானுடைய ஜீவனும்சமும் அவன் இஷ்டம் போல் வகுக்கப்பட்டுள்ளது. இது ஆண்டவன் பொறுப்பில் உள்ள விஷயம்.

வினு :—அல்லாவின் பொறுப்பிலுள்ள ஜீவனும்சத்தைப் பெறுவதற்கான சாதனங்களை நாம் தேட வேண்டாமா ?

விடை :—சாதனங்களைத் தேட வேண்டும் என்பது உங்கள் மீது எற்பட்ட கடமையல்ல. அல்லாஹ் நாடுவானுகில், சாதனங்கள் மூலமாகவோ அல்லது அவைகள் இல்லாமலேயோ உங்களுக்கு உங்கள் வஸ்துவை சேர்ப்பித்து விடுவான்.

தொழில் வேண்டுதல் இவற்றின் நிபந்தனை யன்றியே உங்கள் அத்தேவைக்கு பொறுப்பேற்றிக் கொண்டிருக்கிறுன். அடியான், வழியில்லாததோர் இடத்தில் இருந்து வரும்படியான பொருளைத் தேடுவது அவசியமில்லை.

வினு :—ஜீவனும்சத்தை தேடுவதால் அது அதிகரிக்கும், தேடாமலிருந்தால் குறையும் என்ற காரணம் உண்டோ ?

விடை :—தேடினுல் அதிகரிக்கும் தேடாவிடில் குறையும் என்பதல்ல.

எப்படி யென்றுல் அது ஆதிமுதல் 'லௌஹேமஹபூலில்' அதற்கான குறித்த நேரத்துடன் வரையப்பட்டு விட்டது. ஆண்டவன் கட்டளையோ மாறுபடுவதில்லை. விதி வசத்திலும் சுழற்சி ஏற்படாது.

ஒரு நாள் நபி பெருமானவர்கள் முஸாபிர் ஒருவருக்கு ரொட்டித் துண்டொன்றை கொடுக்கும் சமயத்தில் "நீங்கள் வந்திரா விட்டாலும் இந்த ரொட்டி அவசியம் உங்களிடத்திற்கே வந்திருக்கும்" என்று மொழிந்தார்கள்.

வினு :—நாம் செல்வத்தை யடைந்து காட்டுக்குப் போய் அங்கேயே வாசத்தை ஏற்படுத்திக் கொண்டு வாழலாமா ?

விடை :—உங்களில் அதற்கான சக்தியும் ஆண்டவன் பேரில் போதிய நம்பிக்கையு மிருந்தால் போய் விடுங்கள். இல்லா விட்டால் சாதாரண மக்களைப் போல் ஒருவரை யொருவர் சேர்ந்து வாழுங்கள்.

எவனொருவன் ஆண்டவ னிடத்தில் சகல அடியார்களின் பழக்க வழக்கத்திற் கிணங்க ஒழுகிக் கொள்ளுகிறானோ ஆண்டவனும் அவன் விஷயத்தில் அதே விதத்தில் கருணை காட்டுகிறான். இது மிக்க சிறப்பும் பிரயோஜனமுமுள்ள பிரச்னை. ஆராய்வோர் இதன் மூலமாய் அநேக பிரயோஜனங்களை அடையலாம்.

வினா :—"தோஷாவை அடைந்து கொள்ளுங்கள். ஏனெனில் யாவற்றிலும் சிறந்த தோஷாபேணுதலாகும்" இது எப்படி?

விடை :—இந்த ஆயத்தில் உள்ள விளக்கம் இருவகைப்படும்.

(1) தோஷா என்பதற்குப் பொருள் ஆகிரத் (மறுமை) ஏனெனில் பேணுதலைக் கொண்டு வாழ்வதே சிறந்த தோஷா. இதை தவிர்த்து, யாவற்றிலும் உயரிய தோஷா உலக சொத்து சாமான் என்றோ சொல்லவில்லை.

(2) சிலர், ஹஜ்ஜு பிரயாணத்தில், பிரயாண சாப்பாடு கொண்டு போகாமல் பிறரிடத்தில் கேட்டு அவர்களுக்கு இம்சித்து வந்தார்கள். அவர்கள் அவ்வாறு செய்யாமல் தங்களுடன் பிரயாண சாமான்களை கொண்டு போக வேண்டும் என்பதற்கும் இதன் மூலம் அவர்களுக்கு கட்டளை யிடப்பட்டிருக்கிறது.

பிறரிடம் கேட்பதும் அவர்கள் மீது நம்பிக்கை வைப்பதும் கூடாது. தங்கள் சொந்த சாமான்களைக் கொண்டு பிரயாணம் போவதே மேலாகும் என்பதையும் இது விளக்கிக் கூறுவதாகும்.

வினா:— ஆண்டவன் பேரில் தவக்கல் (நன்நம்பிக்கை) கொண்டவன், தன்னுடைய பிரயாணங்களில் பிரயாண சாமான்களையும் எடுத்துச் செல்வது ஜாயிஸ் (தகுதி) ஆகுமா? ஆகாதா?

விடை:— ஆண்டவன் பால் தவக்கல் வைத்தவன் அநேக பிரயாணங்களில் பிரயாணசாமான்களை எடுத்துச் செல்லுகிறான். ஆனால் அவன் மனம் அதில் சிக்குண்டு போவதில்லை. அவன் உள்ளத்திலோ ஆண்டவன் நம்பிக்கையும் அவன் ஞாபகமுமே சதாகுடி கொண்டிருக்கும்.

அநேகர் பிரயாணசாமான்களை தங்களுடன் கொண்டு போகிறார்களாயினும், அவர்கள் உள்ளம் ஆண்டவன் ஞாபகத்தில் வேலை செய்து கொண்டிருக்குமே தவிர சாமான்களைப்பற்றி அவர்கள் கவலைப்படுவதில்லை. வேறுசிலர், சாமான்களைக்குறித்தே கவலைப்படுகிறார்களே அன்றி அல்லாவின் ஞாபகம் மனதில் அடைவதில்லை.

வினா:— ஹஸ்ரத் (ஸல்) அவர்களும், ஸஹாபாக்களும், சகல பெரியார்களுமே தோஷாவை ஏற்று வந்தார்களே அது எப்படி?

விடை:— தோஷாவை அடைவது முபாஹ் ஆகும், ஹராம் ஆகமாட்டாது. ஆனால் தோஷாவையே மனதிற்கொண்டு ஆண்டவன் ஞாபகத்தை விட்டு விடுவது ஹராமாகும். ஹஸ்ரத் (ஸல்) அவர்கள் விஷயத்தில் உங்களுக்கு சந்தேகம் எதற்காக? அவர்கள் திருஉள்ளம் உண்ணல், குடித்தல், ரூபாய், பவுன் என்பனவற்றிற்கு சற்றும் லக்ஷியம் செய்து வந்ததா? கிடையவே கிடையாது. அவர்கள் முபாரக்கான உள்ளம் அல்லாவுடன் நடமாட்டமாக இருந்து வந்தது. அவர்களுக்கு எத்தகைய நம்பிக்கையும் அல்லாவைக் கொண்டே இருந்து வந்தது. உலக முழுவதும் அவர்களுக்கு (ஸல் அவர்களுக்கு) சமர்பிக்கப்பட்டது; பூமி மட்டத்திற்கு மேலுள்ள பொக்கிஷ சாலைகளின் திறவு கோல்கள் அனைத்தும் அவர்கள் வசமாக்கப்பட்டன. ஆயினும் அவர்கள் அவற்றை ஏற்க மறுத்தார்கள்.

தோஷாவைமாத்திரம் நல்லெண்ணத்துடன் ஒப்புக்கொண்டு வந்தார்கள். புனித உள்ளத்திலோ தோஷாவின் விருப்பமில்லை, ஆமால்களில் நிய்யத்தே பிரதானமாக கருதப்பட்டு வந்தது.

வினு:—யாதொருவேலையை அல்லாவின் பொறுட்டில் (அச்சத்தை முன்னிட்டு) விட்டு விடுவது 'வாஜிப்' என்று சொல்லப்படுகிறதே அது எப்படி?

விடை:— இங்கு அச்சம் என்பது இருவகைப்படும்.

(1) தொடுத்தகாரியம் கைகூடுமா? கூடாதா? அதைக்கிட்டலாமா? முடியாதா? என்பது. அச்சந்தர்ப்பத்திலேயே "இன்ஷா அல்லாஹ்" உபயோகித்தல் அவசியம்.

(2) கிளர்ச்சியின் அச்சம்:- தொடுத்தகாரியம் திறமையுடன் நடைபெறுமா? அல்லது அதனால் ஏதேனும் கிளர்ச்சி ஏற்படக்கூடுமா? என்பது. இதையும் ஆண்டவன் பொறுப்பில் விட்டு விட அவசியம் ஏற்படுகிறது.

வினு:— ஆண்டவன் தன் அடியார்கள் பேரில் பரலாக்கிய (விதித்த) யாதொரு காரியத்தை நிறைவேற்ற யாதொருவன் தன்னில் அதற்குரிய சக்தி இல்லா திருக்கக்கண்டு அதை கைவிட்டு விடும் பட்சத்தில் அவனுக்கு தண்டனை ஏற்படுமா?

விடை:— என் பீர் ஹஸ்ரத் ஷய்க் (ரஹ்) அவர்கள் மொழிந்துள்ளது யாதெனில்:-

அல்லாஹ் தன் அடியானுக்கு இட்டுள்ள கட்டளைக்குக்கீழ்ப்பட்டு நடக்க, அவ்வடியானும் தகுதிவாய்ந்திருத்தல் வேண்டும். அதாவது நோய்களின் காரணம் பற்றியோ அல்லது வேறு தடை தடங்கலைக் கொண்டோ அவன் சக்தியற்றவனாக இருந்தால் அவனை ஆண்டவன்

அக்காரியத்தைச் செய்ய நிர்ப்பந்திக்க வில்லை. ஆனல் அவன் இயன்ற மட்டில் ஆண்டவன் கட்டளைக்கு சலிப்படையாது, அதை மேற் கொண்டு நடந்தால் அதனுல் அவனுக்கு அதிக நன்மை உண்டு.

வினு:— இரண்டு விஷயங்களுக்கிடை உயர்யதை கடை பிடித்து நடப்பது அல்லாவுடைய பொறுப்பில் 'வாஜிப்' ஆனகாரியமா?

விடை:— அல்லா விடத்தில் அத்தகைய வார்த்தைகளைக் கொண்டு பொறுப்பேற்றிவைத்தல் தகுதி யன்று. அடியார்களின் சார் பாக ஆண்டவன் மீது யாதொரு விஷயமும் வாஜிப் இல்லை.

அடியான் செய்யும் வேலையில் அவனுக்குரிய நன்மை இருந்தால் போதும், உயர்வு இருக்க வேண்டு மென்ற அவசியமில்லை. ஒரு பிர யாணத்தின் போது ஹஸ்ரத் (ஸல்) அவர்கள் தங்கள் ஸஹாபாக் களுடன் காலை சூரியன் உதயமாகும் வரையில் நித்திரை புரிந்தார்கள். அன்று காலை தொழுகையும் தவறி விட்டது. தொழுகையோ. நித்திரையைக்காட்டிலும் சிறந்த தென சொல்லப்பட்டிருக்கிறது.

அல்லாஹ், உலகின் கண், அடியார்களுக்கு செல்வத்தையும் இன்னும் அரிய பாக்கியங்களையும் கொடுத்திருக்கிறுன். இதற்கு நிகரில் அடியான் வாழ்க்கைக்கோ, தர்வேஷி (பகீர்தன்மை) மேலானது.

அல்லாஹ், தன் அடியானுக்கு மனைவியும் சந்ததியும் அருள்புரி கிறுன், ஆனல் அவன் வணக்க விஷயத்திற்காகவோ முஜர்ரத் (பிர மாச்சாரி) ஆக இருந்தால் மேலாகும். எனவே அல்லா தன் அடியார் களின் கிரமமான அவசியங்களை நன்கறிந்தவன்.

உதாரணமாக:- ஒரு வைத்தியர், நோயாளிக்கு ஜவ்வரிசி கொதிக் கவைத்த ஜலத்தை ஆகாரமாகத்தருகிறுர். அதற்கு பதிலாக அவர் ஷர்பத்கொடுக்கக்கூடாதா? என்று கேட்கலாம்.

கஷ்டசங்கடத்தின் மூலம் நோயாளி குணமடைகிறுன் யென்பதே கவனிக்கத்தக்க விஷயம்.

வினு:— 'ஸப்ரு' (பொறுமை) என்பது யாது? அதற்கான ஹுக்மு (கட்டளை) என்ன?

விடை:— அகராதியில் 'ஸப்ரு' என்பதற்குப் பொருள் கட்டுப் படுதல் என்பது. அல்லாஹ் கட்டளையிடுகிறுன் "உங்கள் நப்ஸை கட்டுப்படுத்துங்கள். திகைப்பு, அலட்டி இவைகளை விட்டும் அதை தடுங்கள்"

"தம்மீது ஏற்பட்டுள்ள கஷ்ட நிஷ்டூரங்களை நினையாதிருப்பதே 'ஸப்ரு' என்று அறிவாளர் கூறுகிறுர்கள். நீங்கள் அலட்டிக் கொள்வ

தாலும் வியாகூலப் படுவதாலும் பிரயோசன மில்லை. ஏனெனில், விதிவசத்தில் உள்ள கட்டளைக்கு மாறாக ஒன்றும் கூடுதலாகவோ அல்லது குறைவாகவோ ஏற்பட்டு விடாது. துன்பமும் சங்கடமும் ஏற்பட்ட சமயத்தில் அல்லாவின் நன்மைகளைக் கொண்டுள்ள பலா பலன்களையும் அவனது வெகுமதிகளைப்பற்றியும் ஞாபகத்தில் கொண்டு வரவேண்டும். இதுவே தகுந்த பரிகாரம்.

வினா:— ஸவாப், அஸாப் (நன்மை, வேதனை) இவ்விரண்டுமோ வெனில், வானலோகத்தில் உள்ள லௌஹெ மஹபூலில் வரையப்பட்டு விட்டது. அப்படியிருக்க, அடியான் தன்தேவைகளுக்காக அல்லா விடம் கேட்கத்தான் வேண்டுமா? கேட்டல் கேட்காமலிருத்தல் இவ் விரண்டிலொன்று மேற்கொள்வதால் ஏதேனும் பலன் கூடக்குறைச்சல் ஏற்படுமா?

விடை:—ஸவாபை நாடுவது வாஜிப். ஏன்? இது ஆண்டவன் கட்டளை. அதை நாடாமலிருப்பவனுக்கு வேதனை ஏற்படும். ஒரு வன் நல்லமுலுகளைச் செய்யாமல் நற்பலனை விரும்பினால் ஆண்டவன் அவ்வாறு அருள் வதற்கு பொறுப்பாளி இல்லை. ஜீவனும்சத்திற்கும், ஸவாபு அஸாபு என்பதற்கிடை ஒரே யொரு அம்சமே வித்தியாசத் தைக்கொண்டது. அதைப்பற்றி அறிவாளர் என்ன கூறுகிறார்க ளெனில்:- லௌஹேமஹபூலில் வரையப்பட்டுள்ள விஷயம் இரு வகைப்படும். (1) நிபந்தனை யற்றது. அதற்கும் அடியானுடைய செயல் களுக்கும் சம்பந்தமே கிடையாது. அதாவது அதுவே ஜீவனும்சம், மரணம். "அல்லாவுடைய பொறுப்பில் தன் ஜீவனத்தை அடையாத எந்த ஜீவஜந்தும் பூமிமட்டத்தின் மேல் நடந்து திரியக் கூடியதாக இருக்கவில்லை" "மரணம் நேரிடுங்கால் பின் நகரவும் முன்செல்லவும் முடியாது" (திருக்குர்ஆன்)

வினா:— ஹராமான வஸ்துவையோ அல்லது சந்தேகத்திற்குட் பட்டதையோ ஒருவர் கொடுத்தால் வாங்கிக் கொள்ளலாமா?

விடை:— அறிவாளர், இது விஷயமாய் அபிப்பிராய பேதங் கொண்டிருக்கிறார்கள். அறிவாளர்களில் சிலர் சொல்லுகிறார்கள்:— கொடுக்கப்படும் வஸ்து அன்னியர் சொத்து, மார்க்க சட்டம் அத் தகையதை வாங்கக்கூடாது என ஏற்பட்டிருக்குங்கால் அதை பெறு வது முற்றிலும் ஹராம்.

அது அன்னியர் சொத்தா இல்லையா என்ற உண்மை நிச்சயமாய் விளங்காத வரையில் அது சந்தேகத்திற்குட்பட்ட ஹராம். ஹரா மிலிருந்து தப்பித்தல் வாஜிப்—ஹராமான சந்தேகத்திலிருந்து தம்மை காத்துக்கொள்வது தக்வா, பர்ஹேஸ்காரி (பயபக்திபேணுதல்) ஆகும்.

நான் கத்தா பிஸ்கட்

மைதா மாவு 1 பவுண்டு, நல்ல நெய் (கெட்டியாக) 1 பவுண்டு, சர்க்கரை பொடி செய்து 1 பவுண்டு.

இம்மூன்றையும் சேர்த்து நன்ருக பிசைய வேண்டும். பிசையும் போது $1/8$ அவுன்ஸ் தண்ணீரில் கொஞ்சம் உப்பும், கொஞ்சம் ஆப்ப சோடா மாவும் கரைத்து, அதில் ஊற்றி நன்ருக பிசையவும். 24-மணி நேரத்திற்குப் பின் அதை நமக்கு வேண்டிய வடிவத்தில் சிறு துண்டுகளாக செய்து வைக்கவும். இவைகளை ஒரு அகலமான செம்பு பாத்திரத்தில் அடுக்கி அதற்கு ஒரு மூடி போட்டு அடுப்பில் ஏற்றவும். அடுப்பில் தீ யில்லாமல் நெருப்பின் அணல் மாத்திரம் இருக்கவும். அப்பாத்திரத்தின் மூடியின் மேலும் நெருப்பு கங்குகளை போட்டு வைக்கவும். சுமார் $\frac{1}{4}$ மணி நேரத்திற்குள் பிஸ்கட் தயாராகி விடும்.

தயாராகி விட்டது! தயாராகி விட்டது!!

பாஸோவின் மர்மம்

இது ஒரு அருமையான துப்பறியும் கதை. இதில் ஒரு பாங்கிலுள்ள நோட்டுகளை எடுத்து பகரமாக பொய் நோட்டுகளை வைக்க சிலர் எத்தனித்ததையும் அது கைகூடா வண்ணம் செய்து அவர்களின் திருட்டு யோசனைகளை வெளியாக்கிய துப்பறியும் ஷம்ஸின் செயல்களும் விளக்கப்பட்டுள்ளது.

இதன் விலை அணா. 8

தேவையுள்ளோர் 9 அணா. ஸ்டாம்பு அனுப்பி வைத்தால் புக்போஸ்ட் மூலம் அனுப்பப்படும். சந்தாதாரர் 7 அணா. ஸ்டாம்பு அனுப்பினல் போதும்.

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்
நெ. 20 ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.

விகடத் துண்டுகள்.

"நீ அந்த பெண்ணை கலியாணம் செய்து கொள்ள போவதாக சொன்னேயே, அந்த கலியாணம் உடைந்து போய் விட்டதாமே."

"அது உடைய வில்லை"

"அப்போ என்ன ஆனது"

"அது இப்படி ஆச்சுது. அந்த பெண்ணுக்கு துணிமணிக்கு வருஷத்தாலே என்ன செலவாகும் என்று சொன்னார்கள். நான் எனது சம்பளத்தைச் சொன்னேன். கலியாணம் ஏறக்குறைய இளகி போய் விட்டது"

புதிதாக வீட்டில் டெலிபோன் வைத்த உடன் பக்கத்து வீட்டுக் காரர் அங்கு வந்தார். டெலிபோனில் மணி அடித்தது. வீட்டுக்காரர் அதை கவனிக்காமல் தனது வேலைகளை கவனித்துக் கொண்டிருந் தார்.

பக்கத்து வீட்டுக்காரர்: மணி அடிக்கிறதே எடுத்து பார்க்க கூடாதா.

"நான் அந்த டெலிபோனை எனது சௌகரியத்திற்காக வைத் தேனே அல்லாமல் அதன் சௌகரியத்திற்கு நான் இல்லை"

"என் மகளுக்கு ரூபாய். 5000 செலவு செய்து படிக்க வைத் தேன். இப்போ அவளை வருஷத்திற்கு 500 ரூபாய் சம்பாதிக்கும் ஒருத்தன் தான் கலியாணம் செய்ய போகிறான்"

"அது மோசமில்லையே. உங்களுக்கு 10 பர்சண்ட் இந்த காலத் திலே கிடைத்தா போதாதா?"

Edited by M. S. ABDUL KHUDUS.
Published by Janab M. A. Shahul Hameed & Sons.
Printed at Shahul Hameedia Press, Madras.

18723

அலி றலியல்லாஹு அன்ஹு
அவர்களின் மகனார்

முஹம்மது ஹனீபா யுத்த சரித்திரம்.

இதில் ஹஸரத் முஹம்மது ஹனீபா அவர்களின் தாயாராகிய ஹனீபா பீவியுடன் அலி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் யுத்தஞ்செய்து ஜெயித்து, அவர்களை நிக்காஹ் செய்து விட்டுப் போனதும், பிறகு ஹஸரத் முஹம்மது ஹனீபா பிறந்து தாயிடம் வளர்ந்து தமது பிதாவாகிய அலி றலியல்லாஹு அன்ஹுவைத் தேடிச்சென்று பிதாவென்று அறியாமல் யுத்தம் புரிந்ததும், பிறகு ஹஸரத் முஹம்மது ஹனீபா அவர்கள் பூததேவுகளுடன் யுத்தம் புரிந்து, பீவி ஸைனுல் அறபை விவாகம் செய்ததும், ஹஸரத் இமாம் ஹுஸைன் றலியல்லாஹு அன்ஹு அவர்களை எஸீது என்பவன் ஷஹீது செய்து, ஹஸரத் இமாம் ஸைனுல் ஆபிதீன் அவர்களையும் ஹஸரத் நபி நாயகம் அவர்களின் வீட்டாரையும் சிறையிட்ட விஷயமாகத் தாங்கள் புறப்பட்டுப் போகும்போது உமர்அலி, தாலிப்அலி, ஆகில் அலி, மூஸிப்காகான், இப்ருஹீம் உஷர்த்து தோஹான் மோஹான் முதலிய பிரக்யாதி பெற்ற வீரர்களோடு மதீனமா நகரஞ்சென்று உத்பா வலீது என்பவர்களுடனும், மர்வானுடனும் எஸீதுடனும் பல ஊர்களில் பலவிதமாய் மகா வீரியத்துடன் அதிசயிக்கத்தக்க விதமாய் யுத்தஞ்செய்து எஸீதுடைய படைகளை முறிய அடித்தும் ஜெயித்தும், மர்வானுடைய மூக்கையும் காதையும் அறுத்தும் ஹுஸைன் றலியல்லாஹு அன்ஹுடைய பழிக்குப் பதில் பழி வாங்கி சிறையை மீட்டியதும், ஹஸரத் ஸைனுல் ஆபிதீன் அவர்களைப் பட்டத்தில் உட்காரவைத்ததும், எல்லா அரசாங்கத்தையும் தங்களுக் குள்ளடக்கி ஆண்டதுமான எல்லா விஷயங்களும் மிக அருமையாயும் தெளிவாயும், எழுதப்பட்டிருக்கிறது.

புதிய பதிப்பு கலிகோ பைண்டு விலை ரூ. 3—0—0

கிடைக்குமிடம்:—

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்,
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

முரீது உபதேசம்

இதில் அடங்கி யுள்ள விஷயங்களாவன:— உண்மை பகீர்கள் யார்? இராதத்—முரீத்—முருதத் விபரம், முரீத் என்பவர் யார்? தஸவ்வுப் விபரம், முரீதின் ஆரம்ப நிலை, ஷேக் சந்நிதானத்தில் முரீதின் மரியாதை, முரீதுக்கு ஷைக் ஆதரவு, சமா என்னும் புகழ் பாடக்கச்சேரி விபரம், முரீதுக்கு பீர்ஸாஹிப்பிடம் இருக்கவேண்டிய பயபக்தி, முரீதுக்கு ஷைக் ஸாஹிபின் உபதேசப் பயிற்சி விதம், சகோதர வாஞ்சையும் ஏனைய பழக்க உபசாரங்களும், அந்நியர் சேர்க்கை செல்வந்தர் சேர்க்கை, பகீர்களுடன் சேர்க்கை வைத்தல், பகீர் சாஹிபின் எளிமைச் சிறப்பு, பகீரும் சுவால் செய்தலும், பகீர் சுகானுபவ ஒழுக்கம், பகீர் சாப்பாட்டு ஒழுக்கங்கள், தோழருடன் உபசாரமுறை, பிள்ளை குட்டிகளுடன் பகீரின் பழக்காசாரமுறை, பிரயாணத்தில் பகீர்கள் எவ்வாறு ஒழுக வேண்டும், பகீர் ஸாஹிபு இராகம் செவியுறுதல், முஜாஹிதா (தவப்பரயுத்தம்) விபரம், முஜாஹிதாவின் தாத்பரியம், முஜாஹிதாவை பூர்த்திக்கும் அம்சங்கள், ஆண்டவன் மஃரிபத், ஷைதானைப் பற்றிய எச்சரிக்கை, நப்ஸ் எச்சரிக்கை, ஆண்டவன் பயபக்தி, மஹான்களின் பழக்க ஆசாரங்கள், தவக்கல் என்னும் நம்பிக்கை, நற்குண சிலங்கள், ஆண்டவன் சந்நிதானத்தில் நன்னடத்தை, ஷுக்ரு (நன்றி) விபரம், ஸப்று விளக்கம் ரிஜா (சம்மதம்) உண்மை விளக்கம், பரிசுத்தம், தௌபாச் செய்தல், இராக்கால வணக்கம், நபி பெருமானாரின் இராத் தொழுகை, தனிமையில் உபதேசித்தல், உபதேச ஷரத்துகள், நப்ஸும் ஆத்துமாவும், தங்கள் ரியாஜத், குத்பு நாயகத்தின் துவா, மதக்கல்வி முதலியவைகளை விரிவாய் விபரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு முஸ்லிமும் இப்புத்தகத்தை வாங்கி படித்து பிரயோஜனமடைவது அத்தியாவசியம்.

இதன் விலை ரூபா. 1—8—0

கிடைக்குமிடம் :—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.